சாவித்திரி முருகேசன்,
பெருந்துறை.

☐ 'காசுக்கு ஆசைப்பட்ட வங்க மூஞ்சி கவலையா சுத்தான் இருக்கும்' என்ற வரி நூற்றுக்கு நூறு உண்மை. பணம் என்பது நம் தேவைக்காக மட்டுமே... என்ற கருத்தை கணேசலிங்கம் மூலம் எங்களுக்கு உணர்த்திய பாலாவே உங்கள் கதைகள் எங்களுக்கு தொடர்ந்து பாடமாக தேவை.

என்.சண்முகம்,
திருவண்ணாமலை - 2.

☐ சுவையான நாவலுடன், இனிய சிந்தனைகளையும் கூட்டி அறிவுக்கு விருந்திடும் தங்களுடைய பல்சுவை நாவலை பாராட்டி மகிழ்கிறேன்.

ஜெ.பாலாஜி விஸ்வநாத்,
திண்டுக்கல் - 5.

☐ ஐம்பது ரூபாய்க்கும், அறுபது ரூபாய்க்கும் வந்த தீபாவளி மலர்களையெல்லாம் தூக்கி சாப்பிட்டு விட்டது... பல்சுவை நாவலின் தீபாவளி மலர். விலையோ எட்டு, மலரோ லட்டு - ஆசிரியருக்கு அன்பான ஷொட்டு.

கோ.அன்பழகன்,
வேலூர் - 9.

☐ தீபாவளி போனஸாக பாலகுமாரன் அவர்களின் கவிதைகளைப் போட்டு கலக்கி விட்டீர். அது மட்டுமில்லாமல் வாசகர் வீட்டிற்கு எழுத்து சித்தர் குடும்பத்துடன் வருவதாய் அறிவித்திருக்கிறீர். வாழ்மீகிக்கு வாழ்த்துக்கள்.

திருவை குமரன்,
திருவையாறு.

☐ 'முற்றல் நெஞ்சு' தலைப்பில் வெளியான கவிதை, மனிதர்களில் எத்தனை விதம் என்பதற்கு எடுத்துக்காட்டு.

V.மகாலிங்கம்,
பி.என்.பட்டி - 639 205.

☐ அரசியல் அரட்டை அம்மாவுக்கு சரியான சாட்டை அடி சார்.

ஜி.மெய்யப்பன்,
லெட்சுமாங்குடி.

☐ 'பணம் காய்ச்சி மரம்' படிக்கறச்சே கதாபாத்திரங்களுடனும், சம்பவங்களுடனும் ஒன்றிப் போனதில் - மைலாப்பூர் மட்டுமே மனசில் தங்கி சொந்த ஊரே மறந்து போயிட்டேன்.

# பாலகுமாரன்

நல்ல



# முன் பனிக்காலம்

அன்னப்பட்சி ஒன்று தன் பெரிய இறக்கைகளை விரித்து கொண்டு நடக்கவும் செய்யாது, பறக்கவும் முயலாது ஒரு புல் தரையில் ஓடுவது போல் மனோகரி ஓடினாள். பதினைந்து வயது முடிந்து பதினாறு வயதுக்கு அவள் உடம்பு

பிசுப் பொலிவோடு நகர்ந்து கொண்டிருந்தது.

பெரிய கண்கள், கொழுத்த கன்னம், மெல்லிய உதடு, அளவான மூக்கு, ஐந்தேகால் அடி உயரம் அந்த உயரத்துக்கு சற்று அதிகமான பருமன், மாநிறமும் பொன் முடியுமாய் இருந்த தேகத்தை அடிக்கடி ப்ளீச் செய்து நிறமேற்றியிருந்தாள். மூன்று மாதத்திற்கு ஒருமுறை அவளுக்கு பிடித்த உடைகளை வேண்டாமென்று ஒதுக்க வேண்டியிருந்தது. வேறு புதிய உடைகள் வாங்க வேண்டியிருந்தன.

''இப்படியே குண்டாயிட்டு போனா பூசணிக்காய் மாதிரி உருளையாயிடுவே. எதுனா பண்ணு.'' அவள் சினேகிதிகள் எச்சரித்தார்கள்.

''என்ன பண்ணணும்.''

''சாப்பாட்டைக் குறை.''

''அது முடியாது.'' மனோகரி மறுத்தாள்.

''அப்போ எக்ஸர்ஸைஸ் பண்ணு. நின்ன இடத்துலயே அஞ்சு நிமிஷம் ஸைக்கிள் வுடு. அம்பது கிலோவோட நாப்பது தடவை குனிஞ்சு நிமிறு.''

''நடக்கிற மெஷின் செட் பண்ணிக்கோ. மூனு கிலோ மீட்டர் ஸ்பீடுல அஞ்சு நிமிஷம் நிக்காத ஓடு. அந்த அஞ்சு நிமிஷத்துல இருபது கலோரி வேஸ்ட் ஆவுதான்னு பாரு. காலையில ஒரு தடவை, சாயந்திரம் ஒரு தடவை இதை செய்தினா என்ன வேணா சாப்பிடு.''

''என்னால இது செய்யமுடியும்னு நினைக்கிறேன்.''

''நினைக்காத செய். கடவுள் உனக்கு ஏராளமா காசு கொடுத்திருக்கார். நல்ல அப்பா, அம்மா கொடுத்திருக்கார். அன்பான அண்ணன், அக்கா எல்லாம் கொடுத்திருக்கார். அதை எல்லாம் விட அழகான முகம், ஆரோக்கியமான உடம்பு கொடுத்திருக்கார். இதை வீணடிச்சுடாத. நல்லா சாப்பிடு. என்ஜாய் லைஃப். உன்னைப் பார்த்து நாலு பேரு பொறாமைப் படணுமே தவிர, உங்கப்பா பேரைச் சொல்லி அவரு பண்ண பாவம் இப்படி பொண்ணா வந்திருக்குன்னு சொல்லிடக்கூடாது.''

ஒரு பொண்ணுன்ற முறையில நான் பர்சனலா என்ன நினைக்கிறேன், தெரியுமா... என்னைப் பார்த்து நாலு பேர் ஜொள்ளு வுடணும். வயசான ஆம்பளைங்க கூட 'அடே' அப்படின்னு பார்க்கணும். மாடு வருது, யானை வருதுன்னு



சொல்லக்கூடாது. இதான் ரொம்ப முக்கியம். இதுக்காக தான் என்ன வேணா செய்வேன். இதை மறந்துட்டோம். குண்டாயிருந்தா என்னன்னு யோசனை பண்ணிட்டோம். ஒரு பெரிய சோம்பேறித்தனம் சுத்திக்கும். ஐஸ்வர்யா ராய் பாக்கிற போது எனக்கு எரியுது. அய்யோ எனக்கு அந்த ஹைட் இல்லியேன்னு மனசு தவிக்குது. ஹைட்டும், அழகும் கடவுள் கொடுக்கிறதுதான். ஆனா நாம அதை இம்ப்ரூவ் பண்ணிக்கணும்.''

மனோகரியின் கிளாஸ் லீடர் ஒரு குட்டி பிரசங்கம் செய்தவுடன் அங்குள்ள பெண்களெல்லாம் கைதட்டினார்கள். மனோகரிக்கு கம்பனி கொடுப்பதற்காய் மனோகரி அப்பா நடத்துகின்ற த்ரீ ஸ்டார் ஹோட்டலில் உள்ள ஜிம்முக்கு போனார்கள். மாலை நாலிலிருந்து ஆறு வரை பெண்களுக்கான நேரம். அதில் அவள் வகுப்பு பெண்கள் ஏழு பேர் தவறாது வந்தார்கள்.

மனோகரி பிசாசு மாதிரி உடற்பயிற்சி செய்தாள், நிறைய சாப்பிட்டாள். இதனால் அவள் பூதாகாரமாய் மாற வில்லை. முற்றி முதிர்ந்த பெண் பிள்ளை போல் ஆனாள். முகம் பதினாறு வயது என்று நம்பச் சொன்னாலும், முதுகும், மார்பும் இருபத்திரெண்டு என்று காட்டின. அவள் கல்லூரியில் எம்.எஸ்.ஸி. படிக்கிறாள் என்று சொன்னால் எளிதில் நம்பும்படியாய் இருந்தது. டென்த் ஸ்டேண்டேர்டு படிக்கிறேன் என்று சொன்னால் எத்தனை வருடமாய் படிக்கிறாய் என்று கேலியாய் கேட்டார்கள்.

அவளுங்க கிடக்கறாளுங்க... சோத்துக்கு இல்லாத ஜென்மங்க. நம்ம ஊட்டுல எல்லாரும் உயரம். எல்லாரும் அகலம். நீ மட்டும் குறுகலாயிருந்தா உங்கப்பனுக்கு எம்மேல சந்தேகம் வரும். நீ இப்ப பத்தாவது படிச்சு என்னா சம்பாதிச்சு கொட்டணுமா, சமைச்சு கொட்டணுமா, நடத்தன்னு இங்கிலீஷ் பேசக்கத்துக்க. கூட்டல், கழித்தல் போட்டுப்பாரு. மத்ததெல்லாம் வேஸ்ட். நீ எந்த காலேஜுக்கும் போவாதயே நான் எம்.ஏ. சர்டிபிகேட் வாங்கித்தரேன். பத்து வருஷம் முன்னாடி நான் வாங்கலையா எம்.ஏ. எக்க னாமிக்ஸ். அப்போ வாங்கறது கஷ்டமாயிருந்தது. இப்ப ரொம்ப சுலுவு.

''எக்ஸர்ஸைஸ் பண்றதுக்கு மட்டும் ஹோட்டலுக்குப் போவாத. அங்க என்னா நடக்குது, ஏது நடக்குது பாத்துட்டே இரு. ஏன்னா அது உன் ஹோட்டல். உனக்கும்

அதுல பங்கு இருக்கு. நாளைக்கு ஒரு அவசியம் ஏற்பட்டா ஒரு டிபார்ட்மெண்ட நீ நின்னு நடத்தணும்.''

''பொம்பளைங்க என்னைப் பார்த்து பொறாமையில பேசறாங்கன்னு தெரியுதும்மா. ஆனா எல்லா ஆம்பளைங் களும் என்னை 'ஆ'ன்னு பாக்கிறாங்களே அது ஏன்.''

''அடியே எனக்கு நாப்பத்தி மூணு வயசு. என்னையே எல்லா ஆம்பளைங்களும் அப்படி பார்க்கிறாங்க. உன்னை பார்க்க மாட்டாங்களா. பார்த்தா பார்த்துட்டு போறான், பாவம் வுட்டுரு.''

''எங்க கிளாஸ் பசங்க சில பேர் ஜெண்ட்ஸ் பார்த்தா பயப்படற மாதிரி பேசறாளுங்கம்மா.''

''பஜாரிங்க. அவங்களோட சேராத. ஆம்பளையைப் பார்த்தா பயப்படறதுக்கு என்னா இருக்கு. ஆன்னு வாயைப் பொளந்து பாக்கப் போறான். நாம அன்னாண்ட போனவுடனே நம்ம உடம்பைப் பத்தி எதுனா சொல்லப் போறான். சொல்லிட்டுப் போறான். அதைத்தாண்டி வம்பு வந்ததுன்னா திரும்பி செருப்பைக் கையில எடுத்துக்கணும். உங்கம்மாவுக்கு மூளையே கிடையாதா. உங்கப்பன் அறுத்து கடல்ல போட்டுட்டானான்னு கேட்கணும். உங்க தங்கச்சி பொம்பளை இல்லியா. அலியா, பட்டை மாரா, கட்டைக் குரலா ஊரு சுத்தறாளான்னு கேட்கணும். அதுக்கு மிஞ்சி வம்பு வந்ததுன்னு வச்சிக்க கல்லு எடுத்து மூஞ்சியை பேத்துடணும். அதையும் மிஞ்சி வம்பு வந்ததுன்னா ஒன்னு நாம உயிரோட இருக்கணும். இல்லை அவன் உயிரோட இருக்கணும்.''

வியப்போடு அம்மாவை பார்த்துக் கொண்டிருந்த மனோகரி எகிறி அம்மாவைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.

''இன்னொரு கேள்விம்மா. என்னைப் பார்த்து ஜொள்ளு வுடறான். ஆனா சிஸ்டர்னு கூப்பிடறான். அவன் சொல்றது பச்சைப் பொய்யுனு தெரியுது. அவங்களோட பேசறதா, வேணாமா''

''நல்லா பேசலாம். நிறைய நம்பலாம். இது மாதிரி பசங்க ரொம்ப நல்லவனுங்க. பழி பாவத்துக்கு அஞ்சறவ னுங்க. ஒரு பயத்துலதான் உன்னை சிஸ்டர்னு கூப்பிடறான். அது நல்லது. இவங்கக்கிட்ட நல்லா பழகி துணையாகவே வச்சுக்கலாம்.''



''அப்போ நான் டென்த் பாஸ் பண்ணணும்னு அவசி யம் இல்லையாம்மா?''

''அதுக்காக பாஸ் பண்ணாத வுட்டறதா. படி. பாஸ் பண்ணு. ஃபர்ஸ்ட் வரவேணாம். ஆனா பத்து பேர வேலைக்கு வைச்சு மேய்க்க கத்துக்க. நீ கல்யாணம் பண்ணி போற இடம் நம்மளது விட பெரிய இடமா இருக்கலாம். நிலம், நீச்சு, தியேட்டர் ஹோட்டல்னு நாலு வித வருமானம் இருக்கலாம். அதப் பாக்கறதுக்கு படிப்பு வேணுமில்ல. அப் படி தமாஷா தருக்கா படி. மனுஷாளை கவனி. யார் நல்ல வன், யார் கெட்டவன்னு பார். அதான் பெரிய படிப்பு. இந்த படிப்பு படிக்காத வேற யார் எந்த படிப்பு படிச்சாலும் புண் ணியமில்லை.''

''எப்பம்மா என்னை கல்யாணம் பண்ணி கொடுக்கப் போற. எப்ப நான் வேற இடத்துக்குப் போவப் போறேன்.''

''பறக்காதடி.'' அம்மா செல்லமாய் அவள் முகத்தில் அடித்தாள்.

''உனக்கு எந்த வயசுல கல்யாணம் ஆச்சு.''

''பதினாறு வயசு. பதினேழு வயசுல உங்கண்ணன் சரவணன் பொறந்துட்டான். என்னைக் கட்டிக்கிற போது உங்கப்பா ஒண்ணுமேயில்லை. வெறும் புண்ணாக்கு.'' மனோகரியின் அம்மா வசந்த கல்யாணி மிகச் சாதாரண மாக சொன்னாள். ஆனால் இந்த விஷயங்கள் மனோகரி யின் மனதுக்குள் சருகில் தூக்கிப் போடப்பட்ட நெருப்பு சங்கு போல் விழுந்தன. லேசான சிந்தனை காற்று பக்கென்று பற்றி கொண்டு கொழுந்துவிட்டு எரியத் துவங்கின. பள்ளிக் கூடத்தில் கணக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்த போது அவள் மிக ஆழமாய் இதுபற்றி சிந்தித்தாள்.

அம்மாவுக்கு பதினாறு வயது திருமணம். பதினேழு வயதில் சரவணன் பிறந்து விட்டான். பத்தொன்பது வயதில் மீனு அக்கா பிறந்து விட்டாள். இருபத்தியொரு வயதில் இன்னொரு அண்ணன் கார்த்திகேயன் பிறந்திருக்கிறான். அம்மாவுக்கு இப்போது நாற்பத்தி மூன்று வயது. பெரிய அண்ணன் சரவணனுக்கு இருபத்தியாறு வயது. கல்யாணம் ஆகி ஒரு பையன் இருக்கிறான். அக்கா மீனுவுக்கு இருபத்தி நாலு வயது. அவளும் திருமணமாகி ஒரு பொண்ணும், பிள்ளையும் பெற்றிருக்கிறாள். கார்த்திக்குக்கு இருபத்தி ரெண்டு வயது. இன்னும் திருமணமாகவில்லை. எனக்கு பதினைந்து வயது. அம்மாவின் இருபத்தி எட்டாம் வயதில்

பிறந்திருக்கிறேன். இருபத்தியொரு வயதுக்கு பின் அம்மா இருபத்தி எட்டாம் வயதில்தான் குழந்தை பெற்றிருக்கிறாள். இரண்டு அண்ணன்களும், அக்காவும் ஒரு செட்டாக இருக்க நான் மட்டும் தனித்து வளர்ந்தேன். வீட்டுக்குள் இணையான தோழமை இல்லை. அண்ணன் குழந்தையும், அக்காவின் பசங்களும் மிகச் சிறியவர்கள். மற்ற உறவுகள் ஏழையாய் இருந்ததால் நெருங்க பயந்தார்கள்.

பள்ளிக்கூடத்து தோழிகள் மட்டுமே எல்லாம் பேசக்கூடியவர்களாய் இருந்தார்கள். நல்ல வேளை இந்த பள்ளிக்கூடம் கொஞ்சம் வித்தியாசமாய் உள்ளது. படி படி என்று ரிசல்ட்டுக்காக புடுங்கி எடுக்காத பள்ளியாய் இருந்தது. வகுப்பில் பத்தொன்பது பேர்கள். வகுப்பில் ஒரு பெண் மட்டுமே சைக்கிளில் வந்தாள். மற்ற அனைவரும் காரில் வந்தார்கள். சைக்கிளில் வந்த பெண் பள்ளியின் அடுத்த தெருவில் வசிக்கிறாள். அவள் வீட்டில் மூன்று கார்கள் உள்ளன. அவள்தான் உடற்பயிற்சி பற்றி எல்லோருக்கும் வலியுறுத்திச் சொன்னாள்.

மனோகரியின் அப்பா நடத்துகின்ற த்ரீ ஸ்டார் ஹோட்டலுக்கு அவளுடைய சிநேகிதிகள் உடற்பயிற்சி செய்ய வந்தார்கள். வியர்த்து ஒழுகும் வரை உடற்பயிற்சி செய்து விட்டு போனார்கள். அவர்கள் காசு கொடுக்க வந்தபோது மனோகரி மறுத்து விட்டாள்.

"காசாக எதுவும் தேவையில்லை. வேறு உதவி எதுவும் தேவைப்பட்டால் உங்களிடம் நான் கேட்பேன். அப்போது உண்மையாய் செய்யுங்கள் போதும்." மனோகரி சொல்ல மற்ற பெண்கள் கையடித்து சத்தியம் செய்தார்கள்.

"எங்கப்பாக்கிட்ட நீ செய்த உதவியைப் பத்தி சொன்னேன். மனோகரி இஸ் எ கிரேட் ஃப்ரெண்ட். அவளுக்கு எதுனா பண்ணியாகணும்னு நான் பிடிவாதம் புடிச்சேன். வர ஞாயித்துக்கிழமை எங்கப்பா நம்ம ஏழு பேருக்காக, தனியா கிளாஸ் நடத்துவாரு. தன்னோட டிரேட் சீக்ரெட் மொத்தமும் ஷேர் பண்ணிக்கிறேன்னு சொன்னார். என் அப்பா, நாம ஏழுபேர். வேற யாரும் இருக்க மாட்டாங்க."

ஏழு பெண்களும் வாய் பிளந்தார்கள். வீட்டில் உண்மையை சொல்லாது சிநேகிதியின் அப்பாவின் கடைக்கு பதினொரு மணிக்கு வந்தார்கள். கடை தடதடவென்று திறக்கப்பட்டது. அவர்கள் உள்ளே நுழைந்ததும் தடதடவென்று மூடப்பட்டது. அந்த மெல்லிய இருட்டில் ஒருவரை ஒருவர்



கட்டிக் கொண்டு கூச்சலிட்டார்கள்.

குளிர்சாதனம் முடுக்கப்பட்டது. ஒவ்வொரு விளக்காக கடையில் உள்ள விளக்குகள் போடப்பட்டன. குரானா வைரமாளிகை ஒளி வெள்ளத்தில் மின்னத் துலங்கியது.

அவர்களைக் கண்ணாடி கேஸின் முன் திரு. குரானா வரிசையாக உட்கார வைத்தார். தன் கையாலயே கேக் உடைத்து கொடுத்தார்.

"நீங்கள் எல்லோரும் பெரிய இடத்துப் பெண்கள். வசதியான இடத்தில் பிறந்து, வசதியான இடத்தில் வாழ்க்கைப்பட போகிற யுவதிகள். உங்கள் நகையாகவோ, உங்கள் வீட்டார் நகையாகவோ பலவிதமான நகைகள் உங்களிடம் இருக்கலாம். உங்கள் திருமணத்தின் போது இன்னும் அதிக நகைகள் வாங்கலாம்."

"தங்கம், வைரம் மற்றும் இதர கற்கள் பற்றி என் மகளுக்கு நான் சொல்லிக் கொடுக்க விரும்பினேன். என் மகளின் நெருங்கிய தோழிகளுக்கு இதைப் பற்றி கற்றுக் கொடுப்பதில் நான் நிறைந்த சந்தோஷம் அடைகிறேன். இன்றைக்கு ஒரு குடும்பப் பெண் சமைப்பது பற்றி கூட தெரியாமல் இருக்கலாம். ஆனால் தங்க நகைபற்றி தெரியாமல் இருக்கக்கூடாது. சமைக்க ஆள் போட்டு கொள்ளலாம். ஆனால் நகை வாங்குவதில் யாரையும் நம்பக் கூடாது."

"தங்கம் என்பது என்ன? அது ஒரு மென்மையான உலோகம். சற்று அரிதான உலோகம். ஆயிரத்து நூறு ஆண்டுகளாகத்தான் இதற்கு ஒரு மதிப்பு வந்திருக்கிறது. செம்பு கலக்காத தங்கத்தால் எந்த உபயோகமுமில்லை. இது செம்பு கலக்காத தங்கம்" ஒரு கருள் பட்டையை குரானா எடுத்துக் காட்டினார்."

ஒளிகுன்றிய கோணல்மாணலான ஸ்படிகம் போன்ற ஒரு கல்லை மேசையின் மீது வைத்துவிட்டு இதன் விலை நாப்பத்தி ஏழு லட்சம் என்றார். பெண்கள் வாய் பிளந்தார்கள்.

"மூன்று தலைமுறையாய் எங்கள் குடும்பத்தில் உள்ள வைரக்கல் இது. தேவையான போது சிறிது சிறிதாக வெட்டிக் கொள்கிறோம். என் தாத்தாவின் அப்பா, ஒரு ஆயிரம் வெள்ளிக் காசுக்கு ஒரு சுல்தானிடமிருந்து இதை வாங்கினார்."

"பட்டை தீட்டப்பட்டால்தான், தீட்டப்பட்ட விதத்தால்

தான் வைரத்துக்கு மதிப்பு. இதிலிருந்து செய்யப்பட்ட வைரத் தோடு இது. புளு ஜோக்கர் வைரம். ஜோடி அறுபதாயிரம். ஏழு, ஏழு பதினாலு கல் ஒன்பது கிராம்.''

பதினோரு மணியிலிருந்து இரண்டு மணிவரை பாடம் நடந்தது. ஆர்வமிக்க அந்த பெண் குழந்தைகள் ஏகப்பட்ட விஷயம் அங்கு தெரிந்து கொண்டார்கள். கடையை விட்டு வரும்போது அவர் காலை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு வந்தார்கள். அவர் எல்லா குழந்தைகளுக்கும், மயில் பொம்மையிலான வெள்ளி குங்குமச் சிமிழ் கொடுத்தார்.

''எங்க வீட்டுல கலக்கிட்டேன்டி, எங்க அம்மா தாலிக் கொடியை கழட்டி கையில எடை போட்டு இத்தனை கிராம்னு கரெக்டா சொன்னேன். எங்கம்மா ஆடிப்போயிட்டாங்க. சேதாரம் போக என்ன மதிப்புன்னு கணக்கு போட்டு சொன்னேன். எங்கப்பா எழுந்து வந்து கை குலுக்கினார்.''

பாட்டியோட வைர நெக்லஸ் எடுத்து போட்டா ஆவறதில்லன்னு எங்கப்பா சொன்னார். நூத்திப் பதினாலு கல்லு இருந்தது. ஒவ்வொரு கல்லா லென்ஸ் வைச்சுப் பார்த்தேன். மூணு கல்லு தப்பு தப்பான கல்லுல க்யூடெக்ஸ் போட்டு வைச்சு கொடுத்தேன். அப்பா, அம்மா நான் குரானா அங்கிள் கடைக்குப் போனோம். குரானா அங்கிள் நான் வைரம் பார்த்தது கரெக்ட்னு சர்டிபிகேட் கொடுத்துட்டாரு. எங்க வீட்டுல எனக்கு ஒரே மரியாதை போயேன். அங்கிள் கடையிலேயே கல்லுமாத்த கொடுத்துட்டேன்.

பதினைந்து முடிந்து பதினாறு வயது. டென்த் ஸ்டேண்டேர்டு. மதார்த்த உடம்பு, குழந்தை முகம், விதவிதமான உடைகள். மனோகரி ஒரு காட்டு ராணி போல் இருந்தாள்.

வெள்ளை வெளேரென்ற மெல்லிய உடையில், இறுக்கிப் பிடித்த மார்பு கச்சையும் ஏகப்பட்ட மடிப்பு வைத்து புஸ்சென்று பரவிக்கிடந்த இடுப்பு பகுதியும், தரையில் புரளும் சரிகைக் கரையுமாய் அவள் ஹோட்டல் வராண்டாவில் ஓட ஒரு பெரிய அன்னப்பட்சி இறக்கையை விரித்துக் கொண்டு பறக்க முடியாமல் ஓடுவது போல் இருந்தது. அவள் தாண்டிப் போக ஒரு செண்ட் வாசனை முகத்தில் அடித்தது.

அன்றைக்கு அவள் ஹோட்டலில் மூன்று ஹாலிலும் நிகழ்ச்சிகள் இருந்தன. மினி ஹாலில் நிச்சயதார்த்தமும்,



பேஸ்மெண்ட் ஹாலில் கல்யாணமும், ரிசப்ஷனும். மேல் ஹாலில் ரிசப்ஷன் மட்டும். இரண்டாவது ஃப்ளோரில் கடைசி டபுள் ரூம் அவளுக்கு கொடுக்கப்பட்டது. அவள் உடுத்தி சீராய் மேக்கப் போட்டுக் கொண்டாள்.

பேருக்கு மேலே ஒரு துப்பட்டாவைப் போட்டுக் கொண்டு ரிசப்ஷனுக்கு வந்தாள்.

''அப்பா எப்படியிருக்கு என் டிரஸ்?''

''டாப்டக்கர். எவ்வளவு வேணா ஹோட்டல்ல சுத்து ராத்திரி வூட்டுக்கு போயிடணும். தங்கக்கூடாது. எங்க இருந்தாலும் ஒன்பதரை மணிக்கு ஆபீஸ் வந்துடணும். என் கூட வீட்டுக்கு வந்துடணும். அப்பா முக்கியமான விஷயம் பேசிட்டிருக்கேன் வெளியே போய் ரிசப்ஷனில் உட்கார்ந்துக்கோ.''

அவள் கழுத்தில் தொங்கிய பதினைந்து பவுன் சங்கிலியை உற்றுப் பார்க்காதவர்களே எவரும் இல்லை. அவள் எல்லா ஹாலுக்கும் போய் வந்தாள். கிச்சனுக்குப் போய் உணவு தயாராவதைப் பார்த்தாள். அண்ணன் சரவணன் அறைக்குப் போய் பன்னிரெண்டு கட்டு நோட்டுகளை எண்ணி சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, அதில் பத்துக்கட்டை பெட்டியில் சுற்றிக் கொண்டு போய் அப்பாவிடம் கொடுத்தாள்.

''சார் ஜாங்கிரி சைஸ் பத்தி மினிஹால்ல கம்ப்ளெய்ண்ட் பண்றாங்க. ஏமாத்தறீங்க அது, இதுன்னு முரட்டுதனமா பேசறாங்க.'' புளோர் இன்சார்ஜிடமிருந்து போன் வந்தது.

''நான் போய் பார்க்கட்டுமாண்ணே.''

''போய் பார். என்னான்னு கேட்டுட்டு வா. எந்த பதிலும் சொல்லாம வா. கஸ்டமர் கோபமா இருக்கும் போது நாம கோபமா பேசக்கூடாது.''

மனோகரி கம்பீரமாய் நடந்து போனாள்.

''யார் இந்த கல்யாணத்துல பெரியவங்க.''

''ஏன் உனக்கு என்ன வேணும்.''

''ஜாங்கிரி சைஸ் சின்னதுன்னு கம்ப்ளெயின்ட் பண்ணீங்களாமே.''

''சாப்பிட்டு பார்க்க வந்திருக்கியா.''

''ஆமா''

"நீ யார்னு கேட்டேயில்லை."

"ஹோட்டல் ஓனர்."

"உடுப்பி ஹோட்டல்."

"புரியலை."

"உடுப்பி ஓட்டலிலிருந்து ஜாங்கிரி வாங்கி இங்க சப்ளை பண்ணிட்டீங்க. அப்படித்தானே."

"அப்படியில்லை. இங்க பங்க்ஷன் நடத்துறவங்க யாரு."

"ஏன் என்னைப் பார்த்தா அப்படி தெரியலையா. அந்த வயதான அம்மா மிகுந்த காரத்துடன் பேசினாள்."

"ரமேஷ்..." தொலைவிலிருக்கிற ஒரு இளைஞனை விரல் சொடுக்கி கூப்பிட்டாள்.

அவன் அருகில் ஓடி வந்து என்ன மனோகரி என்றான்.

"அப்பா அனுப்பிச்சார்."

"அவரே வரேன்னாரே... உன்னையா அனுப்பிச்சார்."

மனோகரிக்கு ரமேஷின் முட்டாள்தனமான பேச்சு பிடிக்கவில்லை.

"காசை வாங்கிப் போட்டுக்கற போது பெரிய மனுஷங்க வராங்க. கம்ப்ளெயிண்ட் பண்ணுறபோது சின்ன குழந்தையை அனுப்புறாங்க. எந்த ஊர் நியாயமிது." அந்த அம்மாள் இன்னும் காரமாக பேசினாள்.

மனோகரி அந்த அம்மாளை புறக்கணித்து, ரமேஷைப் புறக்கணித்து, ஹாலின் குறுக்கே நடந்து மணமக்கள் இருக்கும் பக்கம் போய் திரும்பி சாப்பாட்டு கூடத்தை நோக்கி தேவதை போல் நடந்தாள். மேடையில் பாடிக் கொண்டிருந்தவர்கள் உட்பட, மணமக்கள் உட்பட கோட்டு, சூட்டு உடைகள் உட்பட சுமார் இருநூறு ஜோடி கண்கள் அவளை மொய்த்தன.

இந்த பந்தா காட்டிய பிறகு இங்குள்ள பிரச்சினையை தீர்த்தே ஆகவேண்டும். நான் ஹோட்டல் ஓனர் என்று சொன்னதை அந்த அம்மாள் கண்டு கொள்ளவேயில்லை. இந்த ரமேஷ் மடையன் என்ன மனோகரி என்று வருகிறான். இவனை எதாவது சொல்லி தூக்கி எறிய வேண்டும். நீ ஃபுளோர் இன்சார்ஜ் இல்லை, கிச்சன் இன்சார்ஜ் என்று



மாற்றிவிட வேண்டும். ஜாங்கிரி சிறியதாய் இருந்தால் என்ன செய்வது. பெரிதாய் போடச் சொல்லலாமா. அல்லது போட்டு முடிந்திருக்குமா. இந்த நேரத்தில் ஜாங்கிரியின் சைஸ் மாற்ற முடியாது. வேறு எதாவது செய்தாக வேண்டும். ஜாங்கிரிக்கு காசு குறைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அப்பா ஒப்புக் கொள்ள மாட்டார். அண்ணன் கூச்சலிடுவான். அலட்டலாய் உள்ளே வந்து விட்டேன். என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஹாலை ஒட்டிய சாப்பாட்டு கூடத்துக்கு மனோகரி வந்தாள்.

"சும்மா அந்தப் பிரச்சினையை சொடுக்கு நேரத்தில் முடிச்சேன்" கற்பனையில் சிநேகிதிகளிடம் அலட்டிக் கொண்டாள். யாரிடம் பேசுவது என்று தெரியாமல் விழித்தாள்.

"வாங்க" என்று ஒரு இளைஞர் ஓடி வந்தான். அவளைப் புறக்கணித்தான். இலையில் உள்ள ஜாங்கிரியைப் பார்த்தாள் சிறியதாகத் தானிருந்தது. பட்டையாக இல்லாமல் ஜாங்கிரிக் குவியலாய் செய்யப்பட்டிருந்தது.

"வாங்க அந்த கார்னர்ல இடமிருக்கு."

"நான் சாப்பிட வரலை. நான் இந்த ஹோட்டல் ஓனர். ஜாங்கிரி சைஸ் பத்தி கம்ப்ளெயிண்ட் பண்ணாங்களாம். யார் பண்ணது."

"அவர் தாங்க பொண்ணுக்கு அப்பா. ஒரு வேளை அவர் செய்துருக்கலாம். நான் கூட்டிட்டு வரேன் இருங்க."

"வேணாம். நானே போறேன். அவர் பேர் என்ன."

"ஆனந்த்ராஜ்"

"அவள் நடந்தாள். வெள்ளைத் தேர் போல நகர்ந்தாள். நிறைய பேர் சாப்பிடுவதை நிறுத்தினார்கள்.

"மிஸ்டர். ஆனந்த்ராஜ். நான் மனோகரி. இந்த ஹோட்டல் ஓனர். எல்லாம் சரியா இருக்கா."

"எல்லாம் சரியா இருக்கு. ஒன்னும் பிரச்சினை இல்லை." அவர் உடனடி விசாரிப்பில் திசை புரியாமல் தடுமாறினார்.

"புளோர் மேனேஜர்கிட்ட ஜாங்கிரி பத்தி ஏதோ கம்ப்ளெயிண்ட் பண்ணீங்களாமே."

"சிறிசா இருக்குன்னு சாப்பிடறவங்க சொன்னாங்

சும்மா.''

''அடர்த்தியா இருக்கு. அது ஒரு ஸ்டைல். பதினெட்டு கிராம்லருந்து இருபது கிராம் ஸ்வீம் இருக்கணும். அதான் எங்க கணக்கு. இந்த ஜாங்கிரி இருபது கிராம் இருக்கும். இது பதினெட்டு இருக்கும். இது பத்தொம்பது. அடுக்கி வைக்கப் பட்டிருந்தவைகளை விரலால் எடைபோட்டு மறுபடி வைத்தாள்.''

''இது இருபது கிராம் இருக்குமா யார் சொன்னது,'' பின்னாலயே வந்த அம்மாள் உரத்த குரலில் கூறினாள்.

''பத்து பன்னிரெண்டு கிராம் கூட இருக்காது. கதை அடிக்கிறீங்களே.''

ஏதோ ஒரு குறையை உரத்து சொல்ல வேண்டும் என்ற ஆத்திரம்தான் அங்கே தெரிந்தது.

''ரமேஷ் எலக்ட்ரானிக்ஸ் ஸ்கேல் எடுத்துட்டு வா.'' கட்டளையிட்டாள்.

''அது கிச்சன்ல இருக்கு. மனோகரி.''

''போய் எடுத்துட்டு வா'' சுள்ளென்று சீறி விழுந்தாள்.

ஒரு இருபத்தி இரண்டு வயது வெயிட்டர் பையன் யாரும் உத்தரவிடாமலேயே ஓடிப்போய் சுலமான அந்த எலக்ட்ரானிக்ஸ் தராசைக் கொண்டு வந்தான். தராசின் அடிப்பக்கம் அவன் வெள்ளைச் சட்டையில் கறை ஏற்படுத்தியது. கை கட்டி நிற்பதில் அந்தக் கறையை மறைத்துக் கொண்டான்.

தங்கத்தை நிறுத்துவது போல, அந்த ஜாங்கிரிகள் நிறுத்தப்பட்டன. அவன் கணக்கு துல்லியமாக இருந்தது.

''ரமேஷ், ஸ்வீட் மாத்திடு. அடுத்த பந்திக்கு ஜாங்கிரி நிறுத்திட்டு கோகனட் பர்பி போடு. பேஸ்மெண்ட் ஹாலுக்கு கோகனட் பர்பி பண்ணியிருக்கு. அதை இங்க அனுப்பிச் சுட்டு, ஜாங்கிரியை அங்க அனுப்பிடுங்க.''

''வேணாங்க ஜாங்கிரியே இருக்கட்டும்.'' ரெண்டு மூணு பேர்கள் அவசரமாய் மறுத்தார்கள்.

''கம்ப்ளெயிண்ட் பண்றீங்களே.''

''அது எங்கம்மா... விவரம் தெரியாது சொல்லிட்டாங்க. ஜாங்கிரி நல்லாதான் இருக்கு.''

அந்த அம்மா சொந்தத் தாக்குதலில் பெரும் கோபம



டைந்தாள்.

''இது ஜாங்கிரியா, என் கல்யாணத்துக்கு இவ்வளவு பெரிய ஜாங்கிரி போட்டாங்க.''

''அப்படியா, மறுபடி கல்யாணம் பண்ணிக்கங்க. இதோ பெரிய ஜாங்கிரி போட்டுரலாம்.'' மனோகரி இன்னும் பெரிதாய் கை காண்பித்தாள்.

அங்குள்ளவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். அந்த அம்மாள் முகம் சிறுத்தாள்.

''உங்க அறுபதுக்கு, அறுபதுக்கு கல்யாணத்தை நம்ம ஹோட்டல்ல நடத்துங்க. நான் ஜாங்கிரி பெரிசா போடச் சொல்றேன்.'' அவள் சாப்பாட்டுக் கூடம் விட்டு வெளியே நடந்தாள்.

தராசு தூக்கி வந்த வெயிட்டரை கை அசைத்து அருகே அழைத்தாள்.

தராசு தூக்கிட்டு போய் வைக்கறதுக்கு முன்னாடி ஒரு ரெண்டு டஜன் கோகனட் பர்பி பாக்ஸ்ல போட்டு, மிஸ்டர் ஆனந்த்ராஜ்கிட்ட கொடு. என் பிரசண்ட்டா இருக்கட்டும்.

''எஸ் மேம்.''

''மறக்காம தராசு கொண்டு போய் கிச்சன்ல வைச்சுடு.''

''எஸ் மேம்.''

சாப்பிட்டு எழுந்த கூட்டத்துக்கு நடுவே அவன் அவளுக்கு வழி வகுத்து கொடுத்தான். கதவு திறந்து விட்டான். வெள்ளை முழுக்கைச் சட்டையும், கறுப்பு பேண்டும், கறுப்பு பூட்ஸும் அணிந்து ஒரு இளைஞன் அவளை வழிநடத்தி சென்றதை அனைவரும் வியப்போடு பார்த்தார்கள். யாரது, யாரது என்று அனைவரும் கேட்டார்கள்.

''தேங்க்யூ'' அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு படியில் இறங்கினாள். அந்த இளைஞனை அவளுக்குப் பிடித்திருந்தது. அவன் பெயர் என்னவென்று யார் மூலமாவது கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். அவனுக்கு சிறிய பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

எல்லா அரசிகளுக்கும் அடிமைகளைப் பிடிக்கும். அவளுக்கு அவனை மிகவும் பிடித்தது.

❖ ❖ ❖ ❖

# 2

காசினிவல் என்கிற அந்த மூன்று நட்சத்திர ஓட்டலில் இரண்டாவது தளத்தில் இருநூற்று பத்தாவது அறை மனோகரிக்கு சொந்தமானது. அவள் உடற்பயிற்சி செய்து விட்டு வந்து குளிக்க உடை மாற்றிக் கொள்ள சில சமயம் படுத்து தூங்க அவளுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. பெரிய டூரிஸ்ட் கும்பல் வந்து தங்குமிடத்திற்கு தகராறு வந்தால மனோகரியை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு அந்த அறையை வாடகைக்கு விடுவார்கள். ஆனால், மனோகரியின் எதிர் அறை எண் இருநூற்று ஒன்பது யாருக்கும் வாடகைக்கு விடப்பட மாட்டாது. அங்கே மனோகரியின் மாமா தங்கியிருந்தார். அவருக்கு அறுபத்தியொரு வயது. தொந்தரவு செய்யாதீர்கள் என்று ஆங்கிலத்தில் அச்சடித்த பேப்பர் அதில் நிரந்தரமாய் ஒட்டியிருக்கும்: அதற்கு கீழ் பொன்னம்பலம் என்று எழுதியிருக்கும்.

பொன்னம்பலம் மனோகரியின் அம்மா வசந்த கல்யாணியின் சொந்த அண்ணன். ஒரு வயசாளியை வீட்டில் வைத்துக் கொள்வதில் பல சிரமங்கள் இருந்தன. சட்டென்று ஊருக்கு கிளம்ப முடியாது. சந்தோஷமாய் வாய்விட்டு சிரிக்க முடியாது. வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை அவருக்கு அறிமுகப்படுத்த முடியாது. அறிமுகப்படுத்திவிட்டு பொன்னம்பலம் கேட்கும் கேள்விகளை பொறுத்துக் கொள்ள முடியாது.

''வடிவேலு சம்சாரமா நீ. உன் புருஷன் நாப்பது லட்ச ரூபாய் இன்கம்டாக்ஸ் பாக்கி வைச்சுருக்கானாமே. அந்த குடுக்காது புள்ளையார் கோவில் கும்பாபிஷேகம். முருகன் கோவிலுக்கு தங்கத்தேர்னு அலையறான். அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டியதை அரசாங்கத்துக்கு கொடுத்துட ணும். அப்பதான் கடவுளுக்கு கொடுக்க வேண்டிய காச மரியாதையா இருக்கும். கவர்மென்ட்டை ஏமாத்திட்டு கடவுளுக்கு கொடுக்கிறது கடவுளையும் திருடன்ற மாதிரி யில்லே. கடவுளையே தன் திருட்டுக்கு கூட்டுன்னு நினைக்கிற மனுஷன் நல்லாயிருப்பானா. அவன் குடி விளங்குமா.''



வீட்டுக்கு வந்த விருந்து இருண்டு போகும்.

''ந்தா என்னா பேசற நீ. வீட்டுக்கு வந்தவங்ககிட்ட'' வசந்த கல்யாணி அதட்டுவாள்.

அதட்ட அதட்ட மடக்க, மடக்க அவர் குரல் அதிகம் உயரும்.

''ஊரைக் கொள்ளை அடிச்சுட்டு சாமி தலையில பஞ்சாமிர்தம் ஊத்தறீங்களா. அது வெங்கல பொம்மைடா. அது தலையில பஞ்சாமிர்தம் ஊத்துனா களிம்புதான் புடிக்கும். களிம்பு பட்ட பஞ்சாமிர்தம் சாப்பிட்டீங்கன்னா பேதி ஆவும். ஏழைங்களுக்கு சோறு போடுங்கடா. அதான் வழிபாடு. பெரிய வழிபாடு.''

ஆனால் அவர் சொல்வது யாருக்கும் புரியாது. பிடிக்காது.

இந்த மாதிரி இரண்டு மூன்று சண்டைகளுக்கு பிறகு அவருக்கு ஹோட்டலில் தனியாய் நிரந்தரமாய் ஒரு அறை கொடுக்க ஏற்பாடு செய்தாள். கோதுமை கஞ்சி, தயிர் சாதம், வாழைப்பழம், பசும்பால் என்கிற விஷயங்கள் ஹோட்டலிலேயே கிடைத்துவிட மற்ற சவுகரியங்களுக்கும் அதுவே நல்ல இடமாய் போயிற்று.

ஒரு நாளைக்கு எண்ணூறு ரூபாய் வாடகை வர வேண்டிய இடத்தை அவருக்கு ஒதுக்க வேண்டியிருந்தது. அவருடைய பங்கும் ஒரு குறிப்பிட்ட அளவு ஓட்டலில் போடப்பட்டுள்ளதால் இந்த அறை கொடுப்பது பெரிதாகப் படவில்லை.

பொன்னம்பலத்திற்கும் வீட்டைவிட ஹோட்டல் ஒரு நல்ல இருப்பிடமாக இருந்தது. கதவு திறந்து கீழே வந்தால் மிகப்பெரிய கும்பலும், அறை கதவு சாத்தினால் தனிமையும் அனுபவிக்க முடிந்தன.

கிட்டத்தட்ட நான்கு மாதமாக ஹோட்டலிலேயே தங்கினார். அவ்வப்போது வீட்டுக்கும் வருவார். அந்தத் தனிமை மற்றவர் மீது எரிந்து விழுவதை குறைத்திருந்தது. அவரை மென்மைப்படுத்தியிருந்தது. அதே சமயம் பொன்னம்பலம் அவர் அறையில் கண்ணாடி தாண்டி காற்றில் அசைந்த தென்னை மரங்களோடு வாய்விட்டு பேசுவதும் வழக்கமாயிற்று. அவர் பேசும் சில விஷயங்கள் அற்புதமானவை. மிகுந்த கனமான பொருள் கொண்டவை. சொந்த அனுபவத்திலிருந்து பேசப்படுபவை.

இவைகளை ஒரு சபை முன்னே பேசாது அறைக்கு தலை தாழ் போட்டுக் கொண்டு தனியாய் பேசுவதுதான் பிரச்சினையாக இருந்தது.

இதை ஒரு சபை முன்பு பேசினால் அப்போதும் பிரச்சினை ஆகும். அந்த சபையில் அவர் பேசியதை வைத்து கேள்விகள் எழுப்பப்படும். அந்த கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியாது. என் அனுபவத்திலிருந்து சொல்கிறேன் என்பது ஒரு சபையில் பதிலாகாது. குறுகலான மனம் படைத்த மனிதர்களில் பலர் விவாதம் செய்வதில் வல்லவர்களாக இருந்தார்கள். எல்லாவற்றையும் விவாதம் செய்து ஜெயித்து விட துடித்தார்கள். ஏதாவது கேள்வி கேட்டுவிட்டு அதற்கு திருப்திகரமான பதில் எதிர்பார்ப்பார்கள். பதிலே சொல்ல முடியாத கேள்விகள் உண்டு என்பது அவர்களுக்கு தெரியவில்லை.

உதாரணமாய் கடவுள் உலகை படைத்தார் என்று சொன்னால் அந்தக் கடவுளை யார் படைத்தார்கள் என்று கேள்வி கேட்பார்கள். அந்தக் கடவுளை இன்னொரு கடவுள் படைத்தார் என்றோ அல்லது கடவுளை யாருமே படைக்கவில்லையென்றோ அவர்களிடம் பதில் சொல்ல முடியாது.

இங்கு எது சொன்னாலும் கேலியாகும். எதிர்ப்பாகும். கேட்டால் அதை விஞ்ஞானம் என்று சொல்வார்கள். கடவுளை யார் படைத்தார் என்ற கேள்விக்கு உண்மையான பதில் தெரியாது. அதை மனிதர் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் கிடையாது. இதை எந்த விஞ்ஞானியும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

உணர்தல் என்கிற நிலை பிரகாசமாகவும், பூரணமாகவுமிருந்தால் அங்கு பகிர்தலே இல்லை. ஆனால் பகிர்தல் ஒரு வாசனை... பழக்கம்.

''சாப்பாடு ரொம்ப நல்லா இருந்திச்சு.''

''என்னை மறந்து அடிச்சு போட்டா மாதிரி தூங்கினேன்.''

''பொண்டாட்டிய நான் அம்மா வூட்டுக்குப் போயிட்டுவான்ன உடனேயே குஷியாயிட்டா. பத்து நாள் தனியாயிருப்பியான்னு கேட்டு கேட்டு துவம்சம் பண்ணிட்டா. கண்ணை மூடினா பொண்டாட்டி முகம்தான்.''

''கனவுல ஏகப்பட்ட பலூன் போகுது. அதுல ஒரு



பலூன்ல நான் உட்கார்ந்திருக்கேன். வெளியிலிருந்து பார்த்தா அரை அடி பலூன்தான். டபுள் கலர். பலூன் உள்ள போனா பெரிய ஹால் ஆயிடுது. சிங்கிள் கலர். உள்ள ஸ்டியரிங் வீல், ஆக்ஸிலேட்டர் எல்லாம் இருக்கு. வானத்துல பறக்கிற பலூனை அதை வைச்சு கவனமா ஓட்டுறேன்.''

இப்படி மற்றவர்க்கு எந்த அக்கறையும் கொடுக்காத, சிறிதளவும் புரிபடாத, புரிய வேண்டிய அவசியமில்லாத பல விஷயங்களை நாம் தினம் பரிமாறிக் கொள்கிறோம். இந்த விஷயங்களை பரிமாறிக் கொள்கிற போது, இது உண்மையா, இப்படி பரிமாறுவதால் ஏதாவது நன்மையா என்று யாரும் கேட்பதில்லை.

ஆனால் கடவுள் உலகைப் படைத்தார் என்று சொன்னவுடன் வாத பிரதிவாதங்கள் வந்து விடுகின்றன. ஆதாரம் காட்ட முடியாத ஒரு அனுபவத்தை வைத்துக் கொண்டுதான் கடவுளைப் பற்றி பேசமுடியும்.

தான், பிறர் என்ற பேதம் உச்ச கட்டத்தில் தலை தூக்குகிற போது தான் மற்றவரை விட எல்லாவிதத்திலும் உயர்வு என்று அகங்காரம் வருகிற போது, அந்த அகங்காரம் அதிகமாகிற போது, அந்த அகங்காரத்தால் தனிமைப்பட நேருகிறது. அப்படி தனிமைப்பட்ட போதுதான் யார் என்கிற கேள்வி பெரிதாகிறது. தான் என்பது மனசா, உடம்பா என்று ஆராய முற்படுகிறது. தன் மனதை உற்று பார்க்கத் துவங்கி விடுகிறது. எண்ணங்கள் இடை விடாது தோன்றிக் கொண்டிருக்கிற நிலையை இடத்தை உற்றுப் பார்க்கிறது.

எண்ணங்களை உற்றுப் பார்க்க எண்ணங்கள் தோன்றுவது நிதானப்படுகிறது. மனம் செயல்படுவதை ஒரு ஸ்லோமோஷன் படம் போல காண முடிகிறது. அப்போது ஒரு எண்ணத்திற்கும், இன்னொரு எண்ணத்திற்கும் இடைவெளி இருப்பதை கண்டுகொள்ள முடிகிறது. ஒரு எண்ணம் தோன்றி அடுத்த எண்ணம் தோன்றுவதை நிறுத்திய பிறகு அந்த இடைவெளி பெரிதாகிறது.

எண்ணம் எதுவுமில்லாத அதே சமயம் இடைவெளியை தான் என்று உணருகிற நிலை வருகிறது. எண்ணம் எதுவுமில்லை. ஆனால் அதே சமயம் தான் என்ற நிலைமை உண்டு.

ஒருமுறை தெரிந்து விட்டால் இந்த சுற்றுப்புறம் எல்லாம் மறந்து இந்த தானில் அடிக்கடி மனம் லயிக்கும். தான் என்கிற எண்ணமில்லாத இடைவெளியிலேயே லயித்து

கிடக்கும். அதையும் ஆராய்ந்து பார்க்கும்.

கூடு இல்லாத ஒளியும், வடிவமில்லாத சக்தியுமாய் எந்த உவமானமும் வைத்துச் சொல்ல முடியாததாய், எப்படி எல்லாம் விளக்கினாலும் மற்றவர்க்கு பிறருக்கு புரியாத விஷயமாய் விளக்க வேண்டிய அவசியமே இல்லாத வெறும் அனுபவமாய் அங்கே கிடக்கும். வெறுமை சூழ்ந்து தன்னை மட்டும் உணர்ந்திருக்கும்.

இது ஒரு விசித்திர சூழ்நிலை.

பழக்க தோஷத்தால் உண்ட சோற்றையும், கொண்ட பெண் போகத்தையும், பரிமாறிக் கொள்ள முயல்வது போல கண்டதனை காட்சிகளாக விவரித்தல் போல இந்த அனுபவம் குறித்தும் பரிமாறத் தோன்றும்.

இப்படி பரிமாறுவது பேதமை. ஆனாலும் பரிமாறும் முயற்சி இருக்கத்தான் செய்யும். ஆனால், எத்தனை சொன்னாலும் இது அடுத்தவருக்குப் போய் துல்லியமாய் விழாது.

பொன்னம்பலத்திற்கு இப்படிப்பட்ட ஒரு வேதனை இருந்தது. வாழ்க்கையின் லௌகீக வெற்றிகள் முடிந்த நேரம் அவர் தனக்குள் தன்னைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தார். வீடு காப்பதற்காக திருமணத்தைத் தள்ளி போட்டு திருமணத்திற்கான வயது தாண்டிப் போய்விட்டது என்று தவிர்த்து விட்டார். திருமணம்தான் தவிர்க்கப்பட்டதே தவிர பெண் தவிர்க்கப்படவில்லை. பல பொதுப் பெண்களோடு பல நாட்கள் சந்தோஷமாக அனுபவித்தார்.

நண்பனின் மனைவி, வீட்டு வேலைக்காரி, பரத்தை, பணக்கார விதவை என்று ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு பெண்ணோடு உல்லாசம் நடத்தது.

பிறகு உள்ளே ஏதோ ஒன்று நடந்து சட்டென்று எல்லாம் அமைதியாகி விட்டது. வீடு என்கிற இடத்திலிருந்து அன்னியப்பட்டு ஒரு ஹோட்டலுக்கு வந்து தங்கிய போது மனோநிலையில் இன்னும் மாற்றம் ஏற்பட்டு விட்டது. முருகன் படம், சிவலிங்கம், வேலாயுதம், சூலாயுதம் என்று சிறிய அளவில் சின்னங்கள் வைத்து பூஜை செய்து கொண்டிருந்தவர் திடீரென்று எல்லாவற்றையும் வாரி குப்பையில் போட்டு விட்டார். யாரிடமும் பேசாது தனக்குள் நடப்பவற்றையே விருப்பு வெறுப்பின்றி பார்த்துக் கொண்டிருந்தார். உணவைக் குறைத்துக் கொண்டார். அந்த உணவிலும், உப்பும், காரமும் குறைத்தார்.



தன்னுள் உற்றுப் பார்க்கும் போது தன்னைப் பற்றி தானே பேசும் ஒரு பழக்கம் வந்தது. தன்னுள் இருப்பதை தனியே நின்று பேசி வெளியே இறைக்கும் செயல் நோக்கியது. வெளியே இருந்து பார்ப்பவர்க்கு ஒரு பித்துப்பிடித்த செய்கையாகத் தோன்றினாலும் அவருக்கு இது ஆரோக்கியமான விஷயமாகவே இருந்தது.

கண்ணாடியைப் பார்த்து பேசினால் கண்ணாடியிலிருக்கிற அவர் பிரதிபிம்பம் பதில் பேச ஆரம்பித்து விடுகிறது. அதாவது கண்ணாடியிலிருக்கிற பிரதி பிம்பத்தை அவர் எதிராளியாக எண்ண ஆரம்பித்தார். அவர் பக்கமாக ஒரு பேச்சும், கண்ணாடியிலுள்ள பிரதி பிம்பத்திற்காக ஒரு பேச்சும் இரண்டு விதமான பேச்சுக்கள் பேசினார். ஒரே விஷயத்தை ஒட்டியும், வெட்டியும் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார். விஷயம் குழப்பமாயிற்று. அதனால் நிலைக் கண்ணாடியை அகற்ற சொல்லி விட்டார்.

அவர் இரண்டாம் மாடியிலிருந்து ஜன்னல் வழியே தெருவைப் பார்த்து சென்னை நகர மக்களோடு பேசினார்.

ஆத்மா என்பது இல்லை. சென்னை நகரத்து மக்களே புரிந்து கொள்ளுங்கள். ஆத்மா என்பது இல்லை.

என்னை நான் பொன்னம்பலம் என்று சொல்லிக் கொள்வதற்கு பதிலாக என்னை ஆத்மா என்று சொல்லிக் கொள்கிறேன். வேறு ஒரு அடையாளம் காட்டிக் கொள்கிறேன்.

அதெப்படி. பொன்னம்பலத்திற்கு மீசையிருக்கிறது. வெள்ளை வெளேரென்ற தலை உள்ளது மார்பில் ரோமம் இருக்கிறது. ஆத்மாவுக்கு அதெல்லாம் கிடையாது என்று சொல்லலாம்.

அவ்வளவுதானே... அப்போது ஆத்மா என்பது மயிரில்லாத பொன்னம்பலம் என்று ஆகிறது. அதாவது மனதின் இன்னொரு கற்பனை. அதாவது மனதின் இன்னொரு மயக்கம். அதாவது மாயையின் இன்னொரு தோற்றம்.

ஆத்ம தரிசனம் என்பதற்கு அறிஞர்கள் ஆழ்ந்த தூக்கத்தை உதாரணம் சொல்கிறார்கள்.

மிக சுகமாகத் தூங்கினேன் என்று சொல்வது யார், யார் அதை உணர்ந்தார்கள். அப்படி உணர்ந்தவரே ஆத்மா. இதில் ஒரு தவறு இருக்கிறது.

ஆழ்ந்த தூக்கம் என்பது விழித்த பின்புதான் அனுபவ

மாகிறது. தூங்கும் போது அனுபவமாவதில்லை. அது விழித்த மனதின் பேச்சு கற்பனை.

ஒரு சுகம் முடித்த பிறகு அதைப்பற்றி என்ன சொல்வது என்று தெரியாமல் சுகமாகத் தூங்கினேன் என்று சொல்லி விட்டு விடுகிறது.

அனுபவித்தவர் என்று ஒருவர் இருப்பின் அனுபவிக்கும்போதே அல்லவா பேசியிருக்க வேண்டும்.

ஆத்மாவுக்கு அனுபவம் தெரியாது என்றால் ஆத்மா இருப்பது பற்றி அல்லவா கேள்வி வந்துவிடும். நிறைகுடம் தளும்பாது நீர் இல்லாத குடமும் தளும்பாது அல்லவா

நான் என்கிற போது கை நெஞ்சுக்கு போகிறது. ஆகவே, ஆத்மா அங்குதான் இருக்கிறது என்று பெரியோர்கள் சிலர் சொல்லுகின்றனர். நெஞ்சத்தில் எண்ணத்தின் மையம் இருக்கிறது. உணர்வின் மையம் இருக்கிறது. அந்த உணர்வை புத்தி வாங்கி வரி வடிவமாய் ஓசையாய் மாற்றுகிறது. அந்த உணர்வு ஐம்புலன்களாலும் வெளியிடப்படுகிறது.

எண்ணக்குவியலா ஆத்மா... இல்லை. அது நான், நான் என்னும் அகங்காரம்.

அகங்காரம் கெடுதலான விஷயமல்ல. அது பூமியின் வாழ்வுக்கு தேவையான விஷயம். அகங்காரம் பலவகைப்படும். பல்வேறு விதமாக வெளிப்படும். உடம்பின் அமைதியான அகங்காரம் உட்காரல். ஆவேசமான அகங்காரம் ஆடல், முகத்தின் அடக்கமான அகங்காரம், சிரிப்பு, ஆவேசமான அகங்காரம், கோபம், விரல்களின் அமைதியான அகங்காரம் சொறிதல். ஆவேசமான அகங்காரம் அடைதல். கிள்ளுதல்.

அகங்காரம் இல்லாமல் உலகில் இருக்க முடியாது. அகங்காரம் தவறு என்று சொல்வதே அகங்காரம். தன் இயல்பை மாற்றுகின்ற ஆவேசம்.

புழுவுக்கும் அகங்காரம் உண்டு. பூமியான வடிவமே ஒரு அகங்காரம். தன்னுள் எதையோ ரகசியமாய்ப் புதைத்து வைத்துக் கொண்டிருக்கும் உருளை வடிவம். பூமி பரந்து தன்னை வெளிச்சமாக்கி கொள்ளவேயில்லை. பூமி ஒரு திமிர்பிடித்த பெண்மணி. அதனால்தான் இடைவிடாது கற்பழிக்கப்படுகிறாள்.



ரகசியமானவைகள் தாக்கப்படுவது பிரபஞ்சத்தின் இயல்பு.

உயிர் இருக்கும் வரை அகங்காரம் இருக்கும் என்றால், பூமி இருக்கும் வரை அகங்காரம் இருக்கும் என்பது உறுதியாகிவிட்ட பிறகு ஆத்ம தரிசனம் என்பது எங்கே - அவ்விதம். அது இன்னொரு அகங்காரம். அது அழகான கற்பனை.

ஆனால் உண்மை அது அல்ல. சென்னை நகரத்து மக்களே புரிந்து கொள்ளுங்கள். ஆத்மா இல்லை. எண்ணங்கள் இல்லாத போது, எண்ணம் தோன்றுமிடத்தில் எதுவுமில்லை. ஒரு வெளிதான் இருக்கிறது. எண்ணங்கள் மேகங்கள் போல நகர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு எண்ணத்திற்கும் இன்னொரு எண்ணத்திற்கும் தொடர்பில்லை. பல நூறு எண்ணங்கள் கூடி ஒரு மனிதனாகிறான். பல ஆயிரம் நூல்கள் கூடி கயிற்றில் ஒரு உருவம் உண்டாக்குவது போல், எண்ணங்களால் மனது உண்டாகிறது. இந்த எண்ணங்களின் வேகம்தான் மனிதனை மற்ற ஜீவன்களிடமிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது.

இரண்டு எண்ணங்களுக்கு உள்ளே இடைவெளி உள்ளது. அந்த இடைவெளியை உற்றுப் பார்க்க எண்ணம் எழுவது நிற்கிறது. எண்ணமில்லாத இடத்தில் எதுவுமில்லை அது வெற்றிடம். அது ஆத்மா இல்லை.

அது அனாதா,
எதுவுமில்லாதது,
ஒன்றுமில்லாதது,
வெற்றிடம்.

எண்ணமில்லாத இடத்தில் ஆத்மா இருப்பது என்பது கற்பனை. பொய். அழகான பொய்.

பொன்னம்பலம் இப்படி தன்னை மறந்து தனியே பேசுவதை ஹோட்டல் பேரர் பையன்கள் கேட்டுவிட்டு சிரிப்பார்கள். அவரைப் போல் நடித்து காண்பிப்பார்கள்.

ஆனால் பொன்னம்பலம் இந்த பேச்சுக்களை மறந்து போயும் எவரோடும் பேசுவதில்லை.

இத பேசறதுக்கு நான் ஆள் தேடினா, நான் பொய்யன். எவன் கூடவோ பேசறதுக்காகவே இப்படி யோசிக்கிறான்னு ஆயிடுது. இந்த விஷயம் எனக்கு நானே கண்டுபிடிச்சு தெரிஞ்சுக்க வேண்டியது... இங்கே குருவுமில்லை,

சிஷ்யனுமில்லை. அப்பனுமில்லை, பிள்ளையுமில்லை, ஆண்டானுமில்லை, அடிமையுமில்லை. கடவுளுமில்லை, பக்தனுமில்லை. அனாதையாய் வந்தது. அனாதையாய் பேசிக் கொண்டிருக்கிறது. இது உணர்தல்தான் பகிர்தல் இல்லை.

பகிரத் துவங்கினால் புரிய வேண்டுமென்ற அக்கறை வந்துவிடுகிறது. அக்கறை வந்துவிட்டால், உண்மையை எளிதாக்கும் மாற்றங்கள் வந்து விடுகின்றன. பொய் கலப்பு ஏற்பட்டு விடுகிறது. பகிர்தலே இல்லாத, தேவைப்படாத ஒரு இடம் இது.

உலகில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் உணவு, நீர், நிலம், பெண், ஆண் என்று பல விஷயங்கள் இருக்கின்றனவே.

பொன்னம்பலம் இவைகள் பற்றி சந்தோஷமாக பகிர்ந்து கொள்வார்.

''என்னடா பேண்டு சத்தம் கீழே...''

''மூணு கல்யாணம் தாத்தா.''

''எங்க சாப்பாடு நல்லாயிருக்கும்.''

''நடு கூடத்துக்கு போயிடுங்க, அங்க அயிட்டம் ஜாஸ்தி. அறுபது ரூவா சாப்பாடு.''

''விஸ்வநாதன் என்னா ஸ்வீட் போட்டிருக்கான்.''

''ஜாங்கிரி.''

''அப்ப அங்கேயே போயிடறேன். என்னை கவனிச்சுக்கடா.''

''எவன் கல்யாணமா இருந்தா என்ன... நாம சாப்பிட்ட மிச்சம்தான். நீங்க வாங்க.

தன் அறைக்கு தனக்கு என்று வரும்போது உணவு குறைக்கின்ற பொன்னம்பலம், ஹோட்டலில் நடக்கிற கல்யாணத்துக்குப் போய் விருந்து சாப்பாடு சாப்பிடுவார். முதல் வரிசையில் உட்கார்ந்து காது பிளக்கிற கச்சேரி கேட்பார்.

கொக்கின் சிறகாய் நரைத்த தலையும், வெள்ளை மீசையும், கதர் சட்டையும், வேட்டியும் கதர் அங்கவஸ்திரமும் அவருக்கு பெரிய மதிப்பைக் கொடுத்தன.

''இந்த ஹோட்டல் முதலாளியோட அங்கிளு. கச்சேரி



கேக்கணும்னாரு.''

''அய்யா வாங்க. நல்லா வாங்க.''

அறையில் நின்று சென்னை நகரத்தைப் பார்த்து தனியாய் பேசுகின்ற அவருக்கு இந்த கல்யாண சீசனின் ஒரு மாறுதலாக இருந்தது. அவர் ஜாங்கிரியை ரசித்து சாப்பிட்டார். தனது மருமகள் செய்த நாட்டாமையை ரசித்து பார்த்தார்.

குட்டி ஒரு லெவலுக்கு வந்துடுச்சு. சீக்கிரமே பெரிய லெவலுக்கு வந்துடும். வாசனையான பசு மாதிரி முன்னையும், பின்னையும் அலையுது.

''ஏய் பொட்ட கழுதை... எனக்கு கிடைச்ச எல்லா சந்தோஷ அனுபவமும் உனக்கும் கிடைக்கட்டும்.''

ஆம்பளையினுடைய அகங்காரப் புத்தி வீரம், பொம்பளையோட அகங்காரம் அழகு, தாய்மை.

பொம்பளை அழகாயிருந்தா மட்டும் போறாது. அம்மாவாவும் இருக்கணும்.

அவர் சாப்பிட்டு கைத்துடைத்து மாடிப்படிக்கு போகும்போது எதிரே ஒரு பேரர் அட்டைப்பெட்டியுடன் வந்தார்.

''என்னடா அது.''

''தேங்கா பர்பி.''

''எங்க எடுத்துட்டு போற.''

அவன் விபரம் சொன்னான்.

''எனக்கு ரெண்டு கொடேண்டா.''

''ரூமுக்கு போங்க... நாலு எடுத்துட்டு வரேன். பாதாம் பால் சாப்பிடறீங்களா. கீர் செய்ய புழிஞ்சு வைச்சிருக்கிறதை தனியா ஒரு கப் வைச்சிருக்கேன்.''

''எடுத்தா... சாப்பிடுவோம்.''

பத்து நிமிடம் பொறுத்து இளம் சூடாய் குழம்பு பதமாய் ஏலக்காய், குங்குமப்பூ வாசனையாய் வறுத்த முந்திரி பருப்பு கலந்ததாய் ஒரு பெரிய டம்ளர் அளவுக்கு பாதாம் பால் வந்தது. நாலு தேங்காய் பர்பியும், இரண்டு ஆமை வடையும், கொஞ்சம் உருளை கிழங்கு சிப்ஸும் அந்தப் பையன் எடுத்து வந்தான்.

''அடடா சொல்லியிருந்தா சாப்பாடு சாப்பிட்டிருக்க

மாட்டேனே.''

''அட என்னா இப்ப... வைச்சிருந்து நாளைக்கு சாப்பிட்டுக்குங்க. ஏஸிரூம்தானே. ஒன்னும் கெட்டுப் போகாது.''

''நீ கொஞ்சம் பாதாம் பால் எடுத்துக்க.'' அவர் அவனை உபசரித்தார்.

அவன் டையை தளர்த்திக் கொண்டு அவர் எதிரே உட்கார்ந்தான்.

''உன் பெரு என்னா''

''ஜெகநாதன்.''

''என்ன படிச்சிருக்கே.''

''எம்.ஏ. பாலிடிக்ஸ்.''

''என்னாது.''

''எம்.ஏ. அரசியல்.''

''இவ்வளவு படிச்சுட்டு ஏன் இங்க வந்து தட்டு தூக்கற.''

''அந்த படிப்புக்கு இந்த வேலைதான் கிடைக்கும். இது கிடைச்சதே அதிர்ஷ்டம்.''

''எந்த ஊரு உனக்கு.''

''தென்காசி.''

அவர்கள் பேசிக் கொண்டேயிருக்கும்போது தடேரென்று கதவு திறந்தது. புயல் மாதிரி மனோகரி உள்ளே நுழைந்தாள்.

''மிஸ்டர். நீதானே தேங்கா பர்பி எடுத்துட்டு போன.''

''ஆமாம்.''

''எத்தனை பர்பி.''

''ரெண்டு டஜன்.''

''அது தவிர ஒரு நாலு பர்பி வாங்கிட்டு போனியாமே... ஏன்.''

அவன் மௌனமாய் அவளைப் பார்த்தபடி நின்றான். அந்த அவள், அவன் பயப்படுகிறான் என்று எடுத்துக் கொண்டாள்.

''ஒரு தேங்கா பர்பியோட விலை நாலு ரூபாய். நீ



எடுத்தது மொத்தம் பதினாறு ரூபாய். ஒரு நாளைக்கு ஒரு பேரர் பதினாறு ரூபாய் திருடினா, அம்பது பேர் தினம் பதினாறு ரூபாய் திருடினா ஒரு மாசத்துக்கு எவ்வளாச்சு.''

அவன் சற்று நிதானித்துவிட்டு இருபத்தி நாலாயிரம் ரூபாய் என்று சொன்னான். பொன்னம்பலம் அவன் நிதானத்துக்கு வாய்விட்டு சிரித்தார். அந்த சிரிப்பு அவளுக்கு கோபத்தைக் கொடுத்தது. பளீரென்று அவனை அறைந்தாள். அவன் தடுமாறி டைபாயின் மீது சரிந்தான். பீங்கான் தட்டில் வைக்கப்பட்டு டிஷ்யு பேப்பரில் சுற்றப்பட்டிருந்த நான்கு தேங்காய் பர்பியும் கார் பெட்டில் விழுந்தன.

''அட என்னம்மா இது நான்தான் நாலு பர்பி எடுத்துனு வரச்சொன்னேன்.'' பொன்னம்பலம் கத்திப் பேசினார்.

ஜெகநாதன் பர்பியை எடுத்து அடுக்கி வைத்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

அவனுக்குள் கடும் சினம் தோன்றியது. அப்படி கோபம் தோன்றுகிற போதே அதை அடக்கி தலையில் தட்டி வெளியே அனுப்பினான். கோபம் வெளியேறியதுமே புத்தி சுறுசுறுப்பாகி விட்டது.

தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் அவள் கெஞ்சுகிற சித்திரம் வந்தது.

'மன்னித்து விடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.'

'என்ன'

'உன் மார்புகளை இரண்டு முறை தொட்டுப் பார்க்க வேண்டும்.'

'போடா, ஹோட்டலை விட்டு வெளியே போடா.'

'சார், நான் எம்.ஏ. படிச்சுட்டு எச்சு தட்டு தூக்க வந்திருக்கேன். இதுல செய்யாத தப்புக்கு அடி வேற வாங்கணுமா சார்.'

'அம்மா, அந்த தம்பி கேட்கிறது நியாயம். ரெண்டு தடவை தொடவுட்டுறு.'

அவனுக்கு சிரிப்பு வந்தது. மாடிப்படியில் துள்ளி இறங்கினான். கால் இடறியது. தடுமாறினான். கைகள் வீசி பிடிப்பு தேடினான். அவன் பிருஷ்டம் தரை தாக்கியது. இடதுபுருவம் சுவர் மோதியது. பத்து படிகள் உருண்டு தரையில் விழுந்தான். எழுந்தான். புருவத்திலிருந்து ரத்தம் பொங்கியது. ரத்தம் பார்த்ததும் பயந்து தரையில் உட்கார்ந்தான். மயங்கி சரிந்தான்.

❖ ❖ ❖ ❖

# 3

ஜெகநாதனுக்கு தென்காசி சொந்த ஊர். குற்றாலத்தின் அருவியும், மலையும் வாழ்ந்து வளர்ந்த இடம். தென்காசியில் ஒரு சிறிய வீடும், பழத்தோட்டமும் கையளவு நெல்வயல் இருந்தாலும், அந்த ஊரின் பையன்களைப் போல பிழைப்புக்காக சென்னைக்கு வந்தான். அருவியும், மலையும், வயலும், தோப்பும் நிறைந்த அந்த ஊரில் ஒரு இளைஞன் சுகமாய் முன்னுக்கு வரலாம். சுற்றுலா பயணிகள் குவியும் அந்த ஊரில் கடை வைத்து பெரிய ஆள் ஆகலாம். ஹோட்டல் நடத்தி உயர்ந்து நிற்கலாம். அல்லது உழுது, பயிர் செய்து உற்சாகமாக இருக்கலாம்.

ஆனால் இந்தியாவின் எல்லா பக்கத்து இளைஞனைப் போல பட்டணத்தில் வேலை செய்வதையே தென்காசி இளைஞர்களும் பட்டணத்துக்கு வருவதையே பாக்கியமாக கருதினார்கள். எந்த வேலையாக இருந்தாலும் பட்டணத்தில் வேலை செய்வதுதான் மரியாதை என்று நினைத்தார்கள். அங்கிருந்து காசு அனுப்புவதில் ஒரு கர்வம் கொண்டார்கள். விடுமுறை நாளில் வீட்டுக்கு தங்க வரும் போது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றார்கள்.

அப்படி வரவேற்பு பெற்ற இளைஞர்களைப் பார்த்து அங்கே வளரும் இளைஞர்களும், பட்டணத்துக்குப் போய்தான் ஆக வேண்டும் என்று உறுதி கொண்டார்கள். உயிர்ப்பும், உவப்பும் கொண்ட அந்த தென்காசியை விட்டுவிட்டு பட்டணத்து சந்துகளில் படாதபாடு பட்டார்கள். எத்தனை பாடுபட்டாலும் ஒரு நாள் பட்டணத்தில் ஜெயிக்க முடியும் என்று உறுதியாய் நம்பினார்கள்.

ஜெகநாதன் திருநெல்வேலி சைவப் பிள்ளை குடும்பத்தில் பிறந்தவன். உழவுத் தொழிலும், சிவ பூஜையும் அவர்கள் குடும்பத்தின் இரண்டு கண்களாக இருந்தன. பட்டப்படிப்பு மிக முக்கியமான விஷயமாக அவர்களிடம் இல்லாது போயிற்று. ஆங்கிலம் புரிந்து கொள்ள முடிந்தால் போதும், தமிழ் படிக்கத் தெரிந்தால் போதும். ஆனால் உழவுத் தொழி



லில் கை தேர்ந்தவனா இருக்க வேண்டும் என்பது அவர்களின் இல்லத்து கொள்கையாக இருந்தது.

ஆனால் பிளஸ் டூவில் அதிக மார்க் வாங்கியதும் ஜெகநாதனுக்கு மேலே படிக்க வேண்டும் என்று தோன்றியது. மொத்த மதிப்பெண்களில் பள்ளியிலேயே அவன் இரண்டாவதாக இருந்தான். முதல் மாணவன் அய்யர். அவனுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தது மூன்றாவது மாணவன் பிற்பட்ட வகுப்பு. அவனுக்கு இன்ஜினியரிங் கிடைத்தது. நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது இடத்தைப் பிடித்த மாணவர்கள் கூட தாங்கள் விரும்பிய விதமாய் மேற்படிப்பை தொடர்ந்தார்கள்.

வீட்டில் உள்ளோர் விரும்பிய வண்ணம் ஜெகநாதன் விவசாய படிப்புக்கு விண்ணப்பித்தான். அவன் விருப்பத்தை வெளியே சொல்லாது உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தான்.

திருநெல்வேலி சைவப்பிள்ளைமார் வகுப்பு என்பது உயர்குடி வகுப்பு என்பதாலும், விவசாயக் கல்லூரிக்கு தேவையான தரவரிசையில் மதிப்பெண் அதிகம் இல்லையென்பதாலும் அவன் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

தான் வேறு வேலை தேடிக் கொள்வதாகச் சொல்லி ஜெகநாதன் பட்டணத்துக்கு வந்தான் அவனுக்கு சினிமாவில் சேர்ந்து மிகப்பெரிய டைரக்டராக வேண்டும் என்கிற தணியாத ஆசையிருந்தது. தஞ்சாவூரிலிருந்தும், மதுரையிலிருந்தும் பல இளைஞர்கள் சினிமாவில் படையெடுத்து ஜெயித்திருக்கிறார்கள். தென்காசியிலிருந்து எவருமே வரவில்லை.

தென்காசி சொந்த ஊராகக் கொண்ட முதல் சினிமா டைரக்டர் ஜெகநாதன்தான். அந்த அருவிக் கரையும், சுத்தமான தமிழும்தான் அவரை சினிமாவுக்கு வரத்தூண்டின. சினிமா அவர் ரத்தத்திலேயே ஊறி இருந்தது. தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்கும் வண்ணம் அவர் குடும்பக் கதைகளையே எடுத்தார். அவரின் பல படங்கள் வெற்றிப் படமாவதற்கு இந்தக் குடும்ப உணர்வே காரணம். அதனாலேயே அவருக்கு தென்காசித் தென்றல், திருநெல்வேலி தமிழன், தெற்கு திசையின் திரை இமயம், தாமிர பரணியின் தங்க மகன் என்றெல்லாம் பட்டம் கொடுக்கப்பட்டன.

வெற்றி பெறும் முன்னே ஜெகநாதன் வெற்றி பெற்றது போல் ஒரு சுயசரிதம் தன்னைப் பற்றி தானே எழுதிக்

கொண்டான். அது அவனுக்குள் எழுதப்படாத பெரும் சுயசரிதமாய் எப்போதும் இருந்து வந்தது.

கனவுகள்தான் வாழ்க்கையின் ஆதாரங்கள். முன்னேற வேண்டும் என்பவனுக்கு கனவுதான் உரம். ஆனால் முன்னேற முடியாதவர்களுக்கு இந்த கனவே நஞ்சாகிவிடும் அபாயமும் இருக்கிறது.

இரண்டு படங்களில் ஜெகநாதன் உதவி இயக்குநராக பணிபுரிந்தான். அந்த இரண்டு படங்களும் தோல்வியைத் தழுவின. மூன்றாவது படத்தில் இன்னும் நம்பிக்கையோடு பணிபுரிந்தான். அந்தப்படம் வெளிவரவேயில்லை. இன்னொரு படம் பணிபுரிவதற்கு முன் ஜெகநாதன் கொஞ்சம் காசு சேர்த்துக் கொள்ள விரும்பினான். உழைப்பாலும், உணவின்மையாலும் ஒடுங்கிப் போயிருந்த உடம்பை தேற்றிக் கொள்ள விரும்பினான்.

கார்னிவல் ஓட்டலில் பேரராகச் சேர்ந்து கொண்டான். உடுப்பி ஓட்டலில், சர்வர் சப்ளையர் என்று அழைக்கப்படும் பெயரே, மூன்று நட்சத்திர ஓட்டலில் பேரராக அழைக்கப்பட்டார்கள்.

கார்னிவல் ஓட்டலில் ஜெகநாதனுக்கு நல்ல சாப்பாடும் நல்ல உடையும், சிந்திப்பதற்கும், எழுதுவதற்கும் நிறைய நேரமும் கிடைத்தன.

தேனாம்பேட்டையில் உள்ள மிகச்சிறிய அறையில் வாழ்ந்தபடி அவன் மீண்டும் சினிமாவுக்குள் புகுந்து புறப்படுவதற்காய் காத்திருந்தான். நல்ல சிறுகதைகள் எழுதினான். அவை பத்திரிகைகளிலும் பிரசுரமாயின. கதை எழுதவோ, சினிமா டைரக்ட் செய்யவோ, நிறைய கற்பனை செய்ய வேண்டியிருந்தது. அந்த கற்பனைகள் அனேகமாய் காதல் கதைகளாய் இருந்தன. கற்பனை செய்வதே கதை எழுதுவதே வாழ்க்கையாக, தொழிலாக இருக்கிற போது வாழ்க்கை உற்சாகமாகத்தான் இருக்கும். அதே சமயம் கொஞ்சம் சூழ்நிலை மறந்து போயும் கிறங்கிக் கிடக்கும். ஜெகநாதனின் வாழ்க்கையும், வயதும் அவனை கிறங்க வைத்திருந்தன.

மனோகரி கையால் அடிபட்டது, அவனுக்கு ஒரு கதைக்கான கருவாகத்தான் இருந்தது. அவமானமாகவேயில்லை. அதுவும் தவிர செய்யாத தப்புக்கு ஒரு பெண் கையால் தண்டனை கிடைத்தவுடன் மனசுக்குள் ஒரு சினிமாத்தனமான அலட்சியம் வந்துவிட்டது.



''ஒரு பாவமும் அறியாத என்னை அடிச்சிட்ட பார்த்திமா'' என்கிற சுகமான கற்பனை வந்தது. பல தமிழ் படங்களில் பெண்ணால் தவறாக தண்டிக்கப்பட்ட ஹீரோக்களே பின்னால் அவளை காதலித்து கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

''அன்னிக்கு தெரியாமல் உங்களை கைநீட்டி அடிச்சிட்டேன். தப்பு செய்து அதுக்காக என்னை மன்னிக்க உங்க மனைவியா என்னை ஏத்துக்கங்க அத்தான்'' என்று பல கதாநாயகிகள் பணிந்து போயிருக்கிறார்கள். பணிந்த மூப்பது வினாடிகளில் ஊட்டிக்குப் போய் பாட்டு பாடியிருக்கிறார்கள். கட்டிப்பிடித்து உருண்டிருக்கிறார்கள். இப்படி பார்த்த பல படங்கள் மனதுக்குள் தாக்கம் ஏற்படுத்தாமல் இருக்குமோ.

ஒரு பெண் அடித்தாலும் பதிலுக்கு கோபமுறாத ஒரு கம்பீரமுள்ள கணவனாக அவன் இருந்தான். தான் வெளிப்படுத்திய கம்பீரத்தை தானே அனுபவித்தபடி நடந்தான்.

''நீங்க ஏன் இவ்வளவு நல்லவரா இருக்கீங்க'' அவள் பேசுவது போன்ற ஒரு வசனத்தை தானே தன்னை நோக்கிப் பேசிக் கொண்டான். அந்த வசனம் பேசும் போதுதான் தடுக்கி விழுந்தான்.

உலகத்தில் கெட்டிக்காரர்கள் எப்போதும் உயிர்ப்போடு இருக்கிறவர்கள் தனக்கு எது நடந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்வார்கள். விழுந்து அடிபட்டு மயக்கம் வந்து ஆட்கள் கூடி அவனை தூக்கி சாய்த்து முகத்தில் தண்ணீர் தெளித்து, அவன் மயக்கம் தெளிவித்து முதலுதவி செய்யும்போது ஜெகநாதனுக்கு இதை எப்படி உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிந்துவிட்டது.

ஜெகநாதனை முதலில் எடிசன் தான் தூக்கினான். எடிசன் ஜெகநாதனுக்கு நல்ல நண்பன். கவிதைகள் எழுதுபவன். அவனுக்கும் நிறைய சினிமா ஆசைகள் இருந்தன. அவனும் தெற்கு பகுதியிலிருந்து வேலை தேடி பட்டணத்துக்கு வந்தவன். இதையெல்லாம் விட முக்கியமான விஷயம் எடிசன் ஹவுஸ் கீப்பர் சரோஜாவை காதலிக்கிறான். சரோஜாவும் அவனைக் காதலிக்கிறாள். அவர்கள் இருவரைத் தவிர இந்த விஷயம் தெரிந்த மூன்றாவது ஆள் ஜெகநாதன்.

ஹவுஸ்கீப்பிங் அறையில் அவர்கள் முத்தம் கொடுத்

தூக் கொண்ட போது இவன் வாசலில் உட்கார்ந்திருப்பான். யாராவது வருவது தெரிந்தால் கதவு தட்டிவிட்டு உள்ளே நுழைவான்.

இந்த காதல் ரகசியத்தை மறந்து போயும் ஜெகநாதன் அசிங்கப்படுத்தவில்லை. இந்த உதவி செய்வதற்காக அந்த பீறவில்லை. எடிசன் பதறி தூக்கி கர்சீப்பால் நெற்றி பொத்தும் போது புருவம் பயங்கரமாக வலித்தது.

"எடு ரொம்ப பலமா அடிபட்டுருக்காடா."

"இல்லை ஜெகா ஒரு அரை அங்குலம். மேல் தோல் லேசா கிழிஞ்சு போச்சு. ரெண்டு தையல் போடுவாங்கன்னு நினைக்கிறேன். பயப்படாதே. பேண்ட் தடுக்கிவிட்டுடுச்சா."

"ஆமா கால் தடுக்கிதான் வுழுந்துட்டேன். என்னை வுட்டுரு. ஓனர் மக மனோகரி என்ன பண்றான்னு பாரு."

"எதுக்குடா."

"அந்த பொண்ணு எனக்கு வேணும். நான் அவளை லவ் பண்ணனும்."

"டேய் என்னடா இது."

"நான் மயக்கமாயிடறேன். என்னை சுத்தி என்ன நடக்குது பார்த்து வைச்சுக்க."

"மனோகரி வருதுடா."

"பெரிசு பண்ணு."

"எதை"

"நான் வுழுந்ததை... மயக்கமாயி வுழுந்துட்டான்னு சொல்லு. ஏன்னு கேட்டா தெரியலைன்னு சொல்லு." ஜெகநாதன் மயக்கமானான்.

மனோகரியும், கிழவரும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

"என்னமோ தள்ளாடிட்டே வந்தான் சார். உச்சியிலிருந்து தபதபன்னு வுழுந்துட்டான்."

"பொறி கலங்கறமாதிரி அடிச்சுட்டியா."

"சும்மா இருங்க தாத்தா." மனோகரி அடிக்குரலில் சீறினாள்.

"எங்க அடிபட்டுருக்கு."



"புருவத்துல மேடம்."

"கர்சீப்பை எடுங்க."

"எடுத்தா பிளட் இலவந்தி வருது மேடம். இது ரெண்டாவது கர்சீப்."

ஜெகநாதன் அம்மா என்று முனகினான்.

"தம்பி உனக்கு எப்படியிருக்கு" மனோகரி ஜெகநாதனை உலுக்கினாள்.

"தம்பியா" எடிசன் அவளை வெடுக்கென்று பேசினான்.

பத்தாவது படிச்சுட்டு தம்பீன்றீங்களா... இவர் எம்.ஏ. ஃபர்ஸ்ட் கிளாஸ். என்னாச்சுன்னு தெரியலை... இப்படி வுழுந்துட்டான். டாக்டர்கிட்ட போகணுங்க.

அவன் பேசி முடிப்பதற்குள் ஜெனரல் மானேஜரும், உதவி மானேஜரும், இருவரும் விரைந்து வந்தார்கள். சோதித்துவிட்டு லேசாக அடிப்பட்டிருக்கிறது என்றார்கள்.

"நிறைய பிளட் போயிருக்கு சார். இது என் ரெண்டாவது கர்சீப்"

"முதல் கர்சீப் எங்க" மனோகரி அதட்டினாள்.

"அதை நனைச்சு புழிஞ்சுனு வரதுக்கு அனுப்பிச்சுருக்கேன். ஆறுமுகம் அந்த ரத்த கர்சீப்பை அம்மாவுக்கு காமி."

"வாணாம். வாணாம். இந்த பையனை தூக்குப்பா."

"நான் ஒண்டியா தூக்க முடியாது சார். நம்மகிட்ட ஸ்ட்ரெச்சர் இருக்கா."

"வீல் சேர் இருக்குப்பா. பேஸ்மாண்ட்ல பார்த்தேன்."

உதவி மானேஜர் அதை எடுத்து வர ஓட மனோகரியின் தாத்தா, மனோகரியின் அப்பாவிடம் குசுகுசுவென்று ஏதோ பேசினார்.

ஜெகநாதன் கண்ணைத் திறந்து அவர்களைப் பார்த்தான். மனோகரியின் கவலையான முகம் தெரிந்ததும் சந்தோஷமாக மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான்.

"என்னா மனோகரி இது..."

"தப்பு பண்ணிடேம்பா."

"பெருசாயி தொலைஞ்சிடுமே, யூனியன் அது. இதுன்னு போச்சன்னா பெரிய கலாட்டா நடக்கும். உனக்கு

சம்பந்தமில்லாத வேலையில ஏன் தலையிடற" மனோகரியின் அப்பா கத்தினார்.

ஜெனரல் மேனேஜரிடம் விஷயத்தைச் சொன்னார்.

"எங்கிட்ட விட்டுருங்க சார். நான் பாத்துக்கறேன். கட்டுப் போடறானே இந்தப் பையன் எடிசன் இவனும் அடிபட்ட பையனும் ஃப்ரெண்ட்ஸ். பேசி அமுக்திடலாம் கவலைப்படாதீங்க."

வீல் சேர் வந்தது. முதலுதவி பெட்டி வந்தது. உதவி மேனேஜர் வேலை தெரியாமல் மிகப்பெரிய கட்டாக போட்டார். அவனை அம்பாசிடர் காரில் ஏற்றினார்கள். தனியார் மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.

பதினாறு வயது மனோகரி என்ன செய்வது என்று தெரியாமல் அழுத்துவங்கினாள். அழுவது மிகச்சுலபமான வேலை. பிரச்சினையின் நுனியைக்கூட புரிந்து கொள்ளத் தெரியாத இந்த வயதில் காதலிக்க மட்டும் நிறைய பேர் ஆசைப்படுகிறார்கள். காதலிக்கப்பட வேண்டும் என்று ஏங்குகிறார்கள். ஊரை அடித்துப் போடும் கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். காதல் தெளிவோடு சம்பந்தப்பட்ட விஷயம். மயக்கத்தோடு சம்பந்தப்பட்ட விஷயமல்ல.

காதலில் உணர்ச்சி தூக்கலாக இருக்கக்கூடாது. வெறும் அறிவால் இயங்கப்படக்கூடாது. உணர்ச்சியும், விவேகமும் ஒன்றை ஒன்று அடக்காமல் வெளிப்படுவதற்குப் பெயர்தான் காதல். இப்படி வார்த்தைகளாகச் சொன்னால் யாருக்கும் புரியாது.

ஒரு பெண்ணைக் கண்டதும் கண்ட இடங்களில் கை வைக்க வேண்டும் என்று தோன்றினால் அது உணர்ச்சி தூக்கல். அறிவோ, விவேகமோ இல்லாத உணர்ச்சி தூக்கல் இந்த உணர்வு தோல்வியைத்தான் தரும்.

இந்தப் பொண்ணு ரொம்ப வசதியா இருக்கும் போல... இதை விடாம மடக்கி, பேசி பேசி வழிக்கு கொண்டாந்துட்டா லவ்வுல ஜெயிச்சடலாம் என்று கணக்கு போடுவது அறிவின் திமிர்.

தன் உணர்வை தீய்த்து சுருக்கியவனுக்கு பிறர் உணர்வு புரியாது. குறிப்பாய் பெண்களை அறிந்து கொள்ள முடியாது. இதுவும் தோல்வியைத் தரும். எல்லா இடத்திலும் சுயநலமே சிந்தனையாய் இருக்கிற ஆணை பெண் விரும்பு



வதே இல்லை. மாறாய் வெறுக்கிறாள். எனவே இதுவும் தோல்வியில் முடியும்.

உணர்வும், விவேகமும், அதாவது அறிவும் ஒன்றை ஒன்று அடக்காமல் இருப்பதே காதல்.

அதாவது உணர்வுகள் தீய்ந்து நசுக்கப்படாமலும் அறிவு மழுங்காமலும் இருக்கும் நேரம்.

தொட வேண்டும் என்று ஆசை வரும்போதே இங்கே இப்போதே தொட்டால் பிரச்சனை வருமா என்று ஆய்ந்து, வரும் எனில் தள்ளிப் போட்டும் வராதெனில் தொட்டுத் தடவியும் பார்க்கும் நேரம். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையும் கவனமும் உள்ள நேரம்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தான் காதலிப்பவரையும் அது பாதுகாக்கும். உணர்வும், விவேகமும் ஒன்றை ஒன்று அடக்காமல் எழும்போது நான் தெரியாமல் தொட்டுட்டேன். தெரியாமல் பேசிட்டேன். தெரியாமல் லவ் பண்ணிட்டேன் என்பதெல்லாம் இல்லை. அது எதையும் எதிர்கொள்வது எதற்காகவும், கலங்காமல் இருப்பது எப்போதும் உண்மையோடு இருப்பது.

ஆனால் இதை உணர, ஆராய்ந்து அறிய, யோசித்து தெளிய பதினாறு வயதால் முடியாது. இருபதும், இருபத்திரெண்டும் கூட போதாது. இது அனுபவத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம். அனுபவம் வயதாக வயதாகத்தான் வரும்.

மனோகரி தன் அறைக்கு ஓடிப்போய் கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டாள். ஆள் இல்லாத இடத்தில் கொஞ்சம் பலமாகவே அழுதாள்.

ஜெகன் ஐயாம் சாரி ஜெகன் என்று மனசுக்குள் தேம்பினாள். எம்.ஏ. வா படிச்சுருக்கீங்க... உங்களை பார்த்தா தெரியவே இல்லையே.

ச்சே நாலு தேங்கா பர்பிக்காக நான் ரொம்ப கேவலமா நடத்துகிட்டேன். அந்த கிழம் இப்படி சாப்பிடும்னு எனக்குத் தெரியவே இல்லை.

உன் மெடிக்கல் செலவெல்லாம் நாங்க எடுத்துக்கிறோம். சம்பளம் கட் பண்ணாம லீவு தரோம். இன்னும் வேற என்ன செய்யணும். பெரிய பூங்கொத்து அனுப்பட்டுமா நிறைய ரோஸஸ் வைச்சு கொடுக்கட்டுமா. வேற என்ன வேணும் தேங்கா பர்பி.

மனோகரிக்கு யோசிக்க தெரியவில்லை.

ஒருமுறை ஆஸ்பிட்டலுக்கோ, அல்லது அவன் இருக்குமிடத்திற்கோ சென்று வாரி சொல்லிவிட்டு வரவேண்டும். அப்பாவிடம் சொன்னால் அதெல்லாம் ஒன்றும் வேணாம் என்று சொல்லி விடுவார். ஆனால் போயே ஆகவேண்டும். போவதுதான் மரியாதை.

ஒரு பெரிய பூங்கொத்துடன் மானசீகமாய் ஆஸ்பத்திரி வார்டுக்குள் அவள் நுழைந்தாள். அந்தப் பூங்கொத்து கொடுப்பதை பலமுறை ஒத்திகை பார்த்துக் கொண்டாள். அவன் தன் வருகையை எதிர்பார்க்காமல் திகைத்து திணறுவதாய் கற்பனை செய்து கொண்டாள்.

நீங்க இவ்வளவு நல்லவங்களா... என் மேல உங்களுக்கு இத்தனை கருணையா... எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை. அவன் அவள் மனசுக்குள் குமுறினான். அவள் சந்தோஷமானாள்.

இதற்குப் பெயர்தான் கற்பனை. எதிர்காலத்தில் வாழ்தல், நிகழ்காலத்தை மறத்தல். இதுதான் விபரீதம் கொண்டு வரும். எதிராளியை எடை போடத் தெரியாது தான் செய்த கற்பனையால் கண்ணை மறைத்துக் கொண்டு நிஜம் தெரிய வாய்விட்டு அழும்படி வைக்கும்.

காதல் என்பது உணர்ச்சியும், விவேகமும் ஒன்றை ஒன்று அடக்காமல் இருக்கும் விஷயம். இது கற்றுக் கொள்வதல்ல உணரப்படுவது.

❖ ❖ ❖ ❖

---

# 4

---

"அப்படியே மயிரை புடிச்சி தரையில் இடித்துப் போட்டு மெறி, மெறின்னு மெறிக்க வேண்டியதுதானடா. அந்த கிழவன் மூஞ்சியில நங்குனு குத்த வேண்டியதுதான. ஒரு உருளைக் கட்டை எடுத்துனு போய் அந்த ஹோட்டல்ல இருக்கிற எல்லா கண்ணாடியும் உடைச்சுட்டு வந்துடறேன் பார்" எடிசன் வெறி ஏறியது போல் பேசினான்.



நண்பனின் கோபம் ஜெகநாதனுக்கு சந்தோஷமாக இருந்தது.

"சும்மா இருடா. நான் அந்த கிழவனுக்கு பர்சி கொண்டாந்ததே அந்தப் பொண்ணை புடிக்கறதுக்குதான்."

"என்ன திடீர்னு வேலை மேட்டர்ல இறங்கிட்டே" எடிசன் கோபம் குறைந்து கேட்டான்.

"வாழ்க்கை போரடிக்குது எடி. செத்துப் போயிடுவேன்னு தோணுது. யாரையாவது நான் லவ் பண்ணணும். என்னை யாராவது லவ் பண்ணணும்."

"அதான் நான் இருக்கேன்டா."

"நீ பொம்பளை இல்லியே."

"அந்தச் சொல்லு. பொட்டச்சிக்கு உடம்பு ஏங்குது."

"இல்லை. அந்த நான் சம்பளத்தை கொடுத்தா அரை மணி நேரம் பொம்பளை கிடைப்பா. எனக்கு லவ் பண்ணணும்."

"ஏன் என்னா அவசியம்."

"வாழ்க்கைல ஒரு நம்பிக்கை வேணும். ஒரு சுறுசுறுப்பு வேணும். யாராவது உந்தி தள்ளணும். இல்லைன்னா இந்த ரெண்டாயிரம் போதுன்னுட்டு ஓட்டல் பேரராவே இருந்துடுவோம். சினிமா ஆசை மறந்துடும்."

"நீ சினிமாவுல ஜெயிக்கிறதுக்கு லவ் பண்ணணுமா. என்னா பொய் இது. ஹோட்டலை விட்டுட்டு சினிமாவுக்குப் போடா. யார்கிட்டயாவது உதவி டைரக்டரா போ."

"யார்கிட்ட போறது."

"தெரியலையே" எடிசன் கைவிரித்தான்.

"ஆங்... நீ இப்படித்தான் பேசுவே. இதுவே நான் லவ் பண்ற பொண்ணா இருந்தா பாரதிராஜா வேணாம், பாலசந்தர்கிட்ட போங்க. பாலசந்தர் வேணாம். மணிரத்னம் கிட்ட போன்னு சொல்வா. லவ் பண்றவங்களுக்குதான் அக்கறையிருக்கும். அக்கறை இருக்கறவங்கதான் முன்னாடி போ முன்னாடி போன்னு தள்ளுவாங்க."

"உனக்கு கிறுக்கு புடிச்சிருக்குடா... இனி எம்பேச்சைக் கேக்க மாட்ட." எடிசன் கொஞ்சம் வெறுப்போடு பேசினான்.

"இப்ப என்ன... நான் விலகிக்கிறேன். நீ என்ன

வேணா செருக்கக்னு சொல்லப் போறியா... ஒரு ஃப்ரண்ட் அப்படி சொல்லக்கூடாது எடி..."

"நான் விலகறேனா... நீ விலகிடுவியோன்னு தோணுதுடா. இப்பவே ஏக கிறக்கத்துல இருக்க... அந்தப் பொண்ணு லவ் யூன்னு சொல்லிடுச்சுன்னு வச்சுக்க... என்னை கிட்ட சேப்பியா நீ..."

"எடி... வெறுப்புல பேசற."

"இல்லடா நீ சொல்ற மாதிரி ஆம்பளை ஃப்ரண்ட்ஷிப் போறாதுதான். எத்தினி இழைஞ்சாலும் ஒரு ஆம்பளைக்கு பொம்பளை சிநேகிதம் மாதிரி வராது. அந்த சிநேகிதம் லவ்வா மாறி நம்ம ரெண்டு பேரும் வாழ்க்கைல ஒன்னாயிடலாம். அப்படிங்கற எண்ணம் வந்துடுச்சன்னா... வேற ஃப்ரண்ட்ஷிப் தேவைப்படாது." எடிசன் கட்டிலுக்கு அருகேயுள்ள ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டு பேசினான்.

"நம்ம ஹவுஸ்கீப்பிங் லேடிய அத்தினி கொஞ்சிக்கினு இருக்கியே... அதென்ன..."

"அது லவ்வான்னே தெரியலை. சத்தியமா நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லை. அது ஒரு விளையாட்டுன்னு தோணுது சிலசமயம் சந்தோஷமா இருக்கு. அந்தப் பெண்ணால எனக்கு சிலசமயம் அசிங்கமா இருக்கு. கெட்ட பேரு... துட்டு செலவு. அவ்வளவுதான்."

"வுட்டுத் தொலைக்க வேண்டியதுதானே..."

"முடியலையே."

"ஏன்..."

"உடம்பு... உடம்புன்னு பறக்குது. பொம்பளைய தொடறதுக்கு உடம்பு பேயா பறக்குது. நமக்கு எப்படி பறக்குதோ... அப்படித்தான் அவங்களுக்கும் பறக்குது."

"எடிசன்... பொம்பளைய உடம்பா நினைச்சுட்டேன்னா நாளைக்கு பொண்டாட்டியோட குடித்தனம் பண்றது கஷ்டம்டா. பொண்டாட்டி படுக்க வந்தா நல்லவ... இல்லேன்னா சனியன்னு ஆயிடும். பொம்பளைங்கறபோது கூடல் மட்டும் ஞாபகம் வந்தா அது நோய்."

"தத்துவம் பேசறீங்களா... நீங்கதான் பொம்பளைய உள்ளுக்குள்ள தேவதையா வச்சு பூஜை பண்ணுவீங்களா... விரல் நுனி கூட படாம ரொம்ப விவேகமா பேசுவீங்களா... உங்களுக்கும் உடம்பு ஆசை இருக்குல்ல... பொண்ணு



அழகா இருந்தாதானேப்பா உனக்கு லவ்வே வரும். ஹோட்டல் முதலாளி பொண்ணு. கழுவின முட்டகோஸ் மாதிரி இருக்கா. உங்களுக்கு லவ் பொறந்துடுச்சு."

"எடிசன், நீ கோவப்படற..."

"பொய் சொன்னா கோவம்தான் வரும்."

"நான் சொல்றது பொய் இல்லடா. நான் காதலிக்க விரும்புகிறேன். காதலிக்கப்பட விரும்புகிறேன்."

"அதுக்குக் காரணம்..." எடி கத்தினான்.

"உடம்பு இல்ல, எடிசன்."

"போங்கடா ரோக்கர் பசங்களா."

"உனக்கு புரியலை, எடிசன்."

"எனக்கு பொய் புரியாதுதான்."

"சரி எடிசன்... நீ செய்த வரைக்கும் தாங்ஸ். பழகின வரைக்கும் நல்லாதான் பழகினோம்... எங்கியோ ஒரு பிரிவு வந்துடுச்சு. நான் ஒருத்திய லவ் பண்றேன்னு சொன்னது உனக்கு தாங்கலை. உன் பின்னாலயே நான் சுத்தணும்னு உனக்கு ஆசை. நீ எவளையோ என்னவோ செய்யறபோது நான் காவல் காத்தேன்னில்ல... இனிமே அப்படி காவல் காக்க மாட்டேனோன்னு ஒரு கலவரம். ரொம்ப எதார்த்தவாதி மாதிரி பேசி விலகற. கனவு இல்லாதவன் யாரு, எடிசன்."

"சரி... நான் போயிட்டா நீ தனியா ரூமுக்கு போயிடுவியா..."

"நான் பாத்துக்கறேன், எடி. நீ கவலைப்படாத போ."

"என்னடா டக்குன்னு சண்டை போட்டுட்ட" எடிசன் தாழ்ந்த குரலில் பேசினான்."

"நல்லதுக்குதான். என் லவ் ஆரம்பிக்கிற போதே நீ விலகி நிக்கறது நல்லதுதான். நான் ஜெயிச்சா வந்து பாராட்டுவ. தோத்தா போனாப்போவுதுன்னு வந்து ஆறுதல் சொல்லுவ. மத்தபடி இதுல நல்லது கெட்டது நானே முடிவு பண்ணி நானே அனுபவிக்கிறேன். பசிக்குது. பிரட் மட்டும் வாங்கி வச்சுட்டு போ. இந்த ஆஸ்பத்திரி பிரட் நல்லால்ல."

எடிசன் சிறிதுநேரம் ஜெகநாதன் கையைக் கோர்த்துக் கொண்டிருந்தான். ஒட்டு மொத்தமாய் யோசித்தான். ஜெகன் சொல்லுவதே சரி என்று பட்டது.

''வரேண்டா.'' எழுந்து வெளியே நடந்தான். அவன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போனநேரம் மனோகரி உள்ளே நுழைந்தாள். கையில் மிக அகலமான பூங்கொத்து வைத்திருந்தாள். அவ்வளவு அகலமான பூங்கொத்தைப் பார்த்து எடுத்துக் கொண்டு போனாலும் திரும்பிப் பார்ப்பார்கள்.

அந்த ஆஸ்பத்திரி முழுவதும் அவளைத் திரும்பிப் பார்த்தது. மனோகரி தன்னை அறிமுகம் செய்து கொண்டு ஜெகநாதன் அறையை விசாரிக்க அங்குள்ள இளம் டாக்டர்கள் அவளுக்கு கூடவே வந்து வழிகாட்டினார்கள்.

வாசலையே வெறித்துப்பார்த்து எடிசனையே நினைத்துக் கொண்டிருந்த ஜெகநாதன் மனோகரி ஜன்னலைத் தாண்டியதும் டக்கென்று கண்களை மூடிக் கொண்டான். அயர்ந்து தூங்குவது போல் நடித்தான். ஏன் அப்படி செய்கிறோம் என்று அவனுக்குத் தெரியவில்லை. மனோகரியைக் கவர்வதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்பதாய் தூங்குவது போல் நடித்தான்.

''மிஸ்டர். ஜெகன்'' ஒரு இளம் டாக்டர் ஆர்வமாய் கத்த ஸ்லை... எழுப்ப வேண்டாம் மனோகரி மெல்லிய குரலில் கட்டளையிட்டாள்.

இவ்வளவு பெரிய பூங்கொத்து மேஜையில் வைக்க இந்த ஜெகன் அதைப் பார்த்து விழி விரிக்க வேண்டும் என்று நினைத்தது வீணாயிற்றே என்று கவலைப்பட்டாள்.

நோயாளி எப்படியிருக்கிறார் என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

மிக அழகாய் உடுத்திய, மிக வளப்பமான மனோகரியை அந்த இளம் டாக்டர்களும் கவர்ந்திழுக்க விரும்பினார்கள். மனோகரியின் அழகைத் தவிர அவள் மிகப்பெரிய பணக்காரி என்பதைத் தெரிந்து வைத்திருந்தார்கள்.

இந்த மாதிரி ஒரு பொண்ணு கிடைச்சா பத்து கட்டிலோட ஒரு பெரிய ஆஸ்பத்திரி ஓப்பன் பண்ணிடலாம். நாலு எக்ஸ்பர்ட்டை விஸிட்டிங் டாக்டரா போட்டு அவங்களைத் தட்டிக் கொடுத்து வேலை, வாங்கி உங்களை மாதிரி உண்டான்னு பேச்சிலயே ஐஸ் சர்பத் கொடுத்து நம்ம க்ளினிக் ரொம்ப ராசியான கிளினிக் என்று பெயர் பரப்பலாம். அந்தப் பெயரில் குளிர் காயலாம்.

நல்ல படிப்பு படித்தால் மட்டும் போதாது... நல்ல மனைவியும் காசுள்ள மாமனாரும் கிடைக்க வேண்டும்.



அழகான பெண்கள், வளப்பமான பெண்கள் உலகத்தில் உண்டு. ஆனால் சுமாரான அழகும் நிறைய காசும் உள்ள பெண்கள்தான் ஆபூர்வம். இங்கே வந்திருப்பவள் அப்படிப்பட்ட பெண்.

இவளை வீழ்த்த முயற்சி செய்வது நல்லது. பலித்தால் பெரிய லாபம். பலிக்காவிட்டால் நஷ்டம் ஒன்று இல்லை. அனுபவம்.

எழுப்ப வேண்டாம் என்று கட்டளையிட்டதும் எழுப்பியவனைப் பார்த்து எழுப்பாதவன் தலையிலடித்துக் கொண்டான்.

நீ எல்லாம் எதுக்கும் லாயக்கில்லடா என்பது போல் சைகை செய்தான். கொஞ்சம் அழகான பெண் உள்ளே வர அங்கே இரண்டு இளைஞர்களுக்கும் சண்டை வந்துவிட்டது.

''மிஸ்டர் ஜெகன் சரியாயிடுவாரா...''

''நான் சொல்றேன் மேடம்'' எழுப்பாதவன் முந்திக் கொண்டான். எழுப்பியவன் வெந்து போனான்.

ஜெகன் என்னுடைய பேஷண்ட். தலையில நாலு தையல் போட்டிருக்கோம். செவன் சென்டிமீட்டர் லெந்த் கிழிஞ்சிருக்கு.

''கடவுளே... மனோகரி கூவினாள்.''

''அதெல்லாம் ஒன்னும் பயப்பட வேணாம். ஸ்கேன் பண்ணிப் பார்த்துட்டோம். ஒன்னும் பிரச்சினை இல்லை. ரத்த சேதாரம் கொஞ்சம் அதிகம். அதனால கொஞ்சம் கிடினஸ், வீக்னஸ் இருக்கும். இன்னொரு மூணு நாள் அல்லது நாலு நாள் அவரு ஆஸ்பத்திரில இருக்கறது நல்லது.''

இதே வேறெங்காவது அடிபட்டிருந்தா டிஸ்சார்ஜ் பண்ணியிருக்கலாம். இது ஹெட் இன்ஜுரி. அதனால அப்சர்வேஷன்ல வைச்சிருக்கோம். பேஷண்ட்டுக்கு தலைவலி வரக்கூடாது.

''வந்தா...'' மனோகரி கேள்வி கேட்டாள்.''

''ப்ரெயின்ல அடிபட்டிருக்குன்னு அர்த்தம். அதை டெஸ்ட் பண்ணத்தான் ஆஸ்பத்திரிலயே வச்சிருக்கோம்.

ஜெகநாதனுக்கு சில விநாடிகள் தன் காயத்தைப் பற்றி பயமாய் இருந்தது. கண் திறந்து விடலாமா என்று தோன்றி

யது. ஆனால் அடுத்த டாக்டர் இன்னொரு டாக்டர் சொன்னதை மறுக்கத் துவங்கினான்.

"இது சந்தேகம்தான் மேடம். இது உண்மையாக இருக்கணும்னு அவசியமில்லை. இந்த மாதிரி லேசான அடிக்கெல்லாம் ப்ரெயின் டேமேஜ் ஆகாது. ப்ளட் லாஸ் ஒன்றும் ஜாஸ்தி இல்லை. நாளைக்கே கூட நீங்க டிஸ்சார்ஜ் ஆகி போயிடலாம். நாளன்னிக்கு வேலைல ஜாயின் பண்ணிடலாம். வேணா நானே ஹோட்டலுக்கு வந்து இவரை செக் பண்ணிட்டு போறேன். நீங்க இருக்கற இடம் சொன்னீங்கன்னா அப்ப வந்து செக் பண்ணி உங்ககிட்ட இன்ஃபார்ம் பண்ணிட்டு போறேன்."

"டேய் டாக்டருங்களா... ரெண்டு பேரும் உன்னை காலை நக்கிறீங்கடா. என்னை என்ன கம்பன்னு நினைச்சுட்டீங்க..." எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

"யார் பேசறது..." என்று அரை தூக்கத்தில் கோபமாக கேட்டான்... அந்த மாதிரி நடித்தான்.

"மிஸ்டர் ஜெகநாதன்... மேடம் வந்திருக்காங்க" எழுப்பியவன் மனோகரியைக் காட்டினான்.

"ஹலோ... வாங்க உட்காருங்க." ஸ்டூல் இல்லையா ஜெகநாதன் தொடர்ந்து நடித்தான்.

"எப்படி இருக்கீங்க, ஜெகநாதன்..." மனோகரி அன்னை தெரசா மாதிரி தன்னை நினைத்துக் கொண்டு அவனைப் பரிவோடு விசாரித்தாள்.

"தலைவலிக்குது. இந்த நர்ஸிங் ஹோம்ல தூங்கவே விடமாட்டேங்கறாங்க." புகார் செய்தான்.

டேய்... தட்டு தூக்கி. உன் போக்கிறதுக்கு ராயப்பேட்டை ஆஸ்பத்திரி வெராண்டால கிடக்க வேண்டியவன் இவ்வளவு வசதி அனுபவிச்சிக்கிட்டே குறை சொல்றியா...

எழுப்பியவனுக்கு கடும் கோபம் வந்தது.

"என்ன தொந்தரவு பண்ணிட்டாங்க..." ஒரு சீறலாய் கேட்டான்.

"நீங்க ரொம்ப சத்தி பேசறீங்க. டாக்டர். என்னய்யா... எதுய்யான்னு வேற பேசறீங்க... இந்த மாதிரி எங்கயாவது வில்லேஜ்ல பேசலாம். ஒரு ஸ்டடி டாக்டர் இப்படியா பிஹேவ் பண்றது..."

எழுப்பியவன் ஜெகனிடம் பேயடி வாங்க, எழுப்பாத



வனுக்கு உற்சாகம் பீறிட்டது.

"அந்த டாக்டர் எப்பவுமே அப்படித்தான். உங்க பிரச்சினை என்னன்னு எங்கிட்ட சொல்லுங்க."

"மேடம் என்னைப் பார்க்க வந்திருக்காங்க. நான் அவங்ககிட்ட கொஞ்சம் பேசணும். எங்க யூனியன்லேர்ந்து அவங்களுக்கு ப்ராப்ளம் வந்துரும். அது வராம இருக்கறதுக்கு சில விஷயங்கள் சொல்லணும்."

"தலைவலிக்குதுன்னீங்களே..."

"காபி இருந்தா போதும். மேடத்துக்கும் காபி வேணும். ஏற்பாடு பண்றீங்களா? உட்காருங்க மனோகரி." அவன் கட்டிலிருந்து கீழே இறங்கினான்.

"நோ... நோ... நோ..." கட்டிலை விட்டு இறங்கக்கூடாது. எழுப்பிய இளம் டாக்டர் அதட்டினான்.

"அப்புறம் ஒன்னுக்கு எப்படி போறது. இங்கனயே வா... சும்மா இருங்க. அந்த டாக்டரைப் புறம் தள்ளிவிட்டு சுவர் பிடித்துக் கொண்டே பாத்ரூம் நோக்கிப் போனான். அதுவும் அற்புதமான நடிப்பாக இருந்தது.

அந்த நேரத்தில் அந்த இடத்தில் மனோகரி அவனுக்கு உதவி செய்வதா வேண்டாமா என்று தெரியாமல் திகைத்துக் கிடந்தாள்.

ஜெகநாதன் பாத்ரூமுக்கு போய் திரும்பியபோது அந்த இரண்டு டாக்டர்களும் இல்லை. மனோகரி மட்டுமே நகத்தைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒரு நாடகத்தின் இரண்டாவது காட்சி அங்கே துவங்கியது.

வாழ்க்கை நாடகம்தான். அதில் நடித்துக் கொண்டே வேடிக்கை பார்க்க கற்றுக் கொள்ள வேண்டும். திரைக்கு அப்பாலிலிருந்து அடுத்தவர் நடிப்பை வேடிக்கை பார்க்க கற்றுக் கொண்டால், தான் நடிப்பதையும் தானே வேடிக்கை பார்த்துக் கொள்ளமுடியும். அதை மறந்துவிட்டு தன்னைச் சுற்றிதான் இந்த நாடகம், தன்னை முன்னிட்டு விட்டுத்தான் இந்த நாடகம், தான்தான் இந்த நாடகம் என்று எண்ணிக் கொண்டால் அழுகையும், புலம்பலும் ஆங்காரமும் சந்தோஷமும் அதிகமாகி ரத்தக் கொதிப்புதான் மிஞ்சும். பிறரை வேடிக்கை பார்ப்பது போல தன்னை வேடிக்கை பார்ப்பதும் ஞானத்தின் ஆரம்ப விஷயங்கள்.

ஜெகநாதன் அந்த டாக்டர்களை வேடிக்கை பார்த்

தான். அவர்கள் செய்த அசட்டுத்தனம் தன்னில் வெளிப்படக்கூடாது என்று தன்னையும் பார்த்துக் கொண்டான்.

❖ ❖ ❖ ❖

# 5

நகம் கடித்துக் கொண்டிருந்த மனோகரி நிமிர்ந்து பார்த்தாள். மிகச் சோர்வோடு வந்த ஜெகநாதன் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

உண்மையிலேயே அயர்சியாகத்தான் இருந்தது. உடம்புக்குள் ஒரு சின்ன நடுக்கம் தோன்றி மறைந்தது. மனது தந்திரம் செய்ய ஆசைப்பட்டாலும் உடம்பு ஒத்துழைக்க மறுத்தது. காதலிக்கவோ, கெட்டிக்காரனாக இருக்கவோ, அன்பாக இருக்கவோ, வாய் சொல் வீரனாக இருக்கவோ உடல் பலம் வேண்டும்.

படுத்துக் கொண்டிருந்தபோது தெரியவில்லை. எழுந்து நடந்து பின்பக்கம் போய் சிவ்ரென்று ஜலம் கொட்டியதும் உடம்பில் ஒரு அயர்ச்சி ஏற்பட்டு விட்டது. அயர்சியாய் நடிக்க வேண்டும் என்று தீர்மானித்ததுபோக அயர்ச்சி நிஜமாகவே ஏற்பட்டு விட்டது.

"ரொம்ப கஷ்டமா இருக்கா." மனோகரி கவலையுடன் கேட்டாள்.

"ஆமாம்."

"ஐயாம் சோ சாரி."

"எதுக்கு."

"என்னாலதான உங்களுக்கு இவ்வளவு கஷ்டம்."

ஏகப்பட்ட தமிழ் சினிமாவில் இந்த சூழ்நிலையில் இதுதான் வசனமாக இருந்திருக்கிறது.

நாம் சினிமா எடுக்கும்போது இப்படிபட்ட வசனங்கள் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஜெகநாதன் இரண்டு தடங்கலில் இயங்கி யோசித்தான்.

"என்னமோ யூனியன் பிராப்ளம் வரும்னிங்களே,



வருமா" மனோகரி மறுபடி நகம் கடித்தாள்.

"அதெல்லாம் ஒன்னும் வராது. அந்த டாக்டர் பசங்களை நகர்த்தறதுக்காக சொன்னேன்."

"டாக்டர் பசங்களா? அவா தானே உங்களுக்கு தையல் போட்டார்."

"இந்த பையனா. இவனுக்கு சட்டையை கிழிஞ்சா கூட தைக்க தெரியாது. ஒரு அம்பது வயது லேடி டாக்டர் போட்டாங்க. இவன் வெறுமனே என் காலை பிடிச்சிருந்தான்."

"எதுக்கு காலை புடிக்கனும்."

"நான் வலியில உதறிடுவேனாம்."

"வலிக்கலையா."

"வலிச்சது, உதறலை."

"அடிபட்டபோது ரொம்ப வலியிருந்ததா?"

"இருந்தது. பயங்கர வலி கத்தனும் போல வலி."

"அப்ப ஏன் கத்தலை."

"நான் கத்தினா மனோகரிக்கு பிரச்சனை வந்திடும் அதான் கத்தலை. என்ன பிரச்சினைன்னு கேக்கறீங்களா மனோகரி." ஜெகநாதனே தொடர்ந்தான்.

"நான் கத்தினா மேட்டர் பெருசாகும். எப்படியாவது நீங்க அடிச்சது தெரிய வந்துடும். உலகத்துல எந்த விஷயத்தை வேணா ஆம்பிளை சாதாரணமா எடுத்துக்குவான். ஆனா ஒரு லேடிஸ் அடிச்சதை சாதாரணமா எடுத்துக்கவே மாட்டான்."

"தொழிலாளியை அடிக்கிற முதலாளியை அதுவும் ஒரு லேடியை, அதுவும் ஒரு சின்ன பொண்ணை சும்மா விடவே மாட்டாங்க."

அவன் பேச பேச மனோகரிக்கு வயிறு கலங்கியது. மறுபடியும் நகம் கடிக்கத் துவங்கினாள்.

"நகம் கடிக்காதீங்க மனோகரி. நான் ஏன் யூனியனுக்கு சொல்லலைத் தெரியுமா நீங்க பாக்கறதுக்கு வளர்த்தியா, அழகா இருக்கீங்களே தவிர, பதினாறு வயதுதான் ஆவுது. டென்த்தான் படிக்கிறீங்க. ஒரு குழந்தையை பத்தி யாராவது கம்ப்ளெயிண்ட் பண்ணுவாங்களா."

மனோகரி நாணமுற்றாள். தலை குனிந்தாள். சுவர் பார்த்தாள். அவனை ஓரக்கண்ணால் நோக்கிவிட்டு தன்

னைப் பத்தி பெருமிதப்பட்டு கொண்டாள்.

''ஆனால் நீங்க குழந்தை இல்லை.'' ஜெகநாதன் மீண்டும் தொடர்ந்தான்.

''உங்களைப் பார்த்தா யாரும் சின்ன பொண்ணுன்னு சொல்லமாட்டாங்க'' ஜெகநாதன் அவளை பல இடங்களில் பார்த்தான்.

''என்னை பத்தி திருடன்னு நினைச்சிட்டீங்களே அதான் எனக்கு தாங்கலை. உங்க ஹோட்டல் திண்ண டத்துல யாராவது திருடுவாங்களா. ஹோட்டல் பேரர் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க. சாப்பாட்டுக்கு இல்லாம வந்தி ருக்காங்கன்னு நினைக்கறீங்களா. ஒன்னுமே தெரியாதவங் கன்னு நினைக்கிறீங்களா. நான் எம்.ஏ. மதுரை காமராஜர். எனக்கு ஊர்ல நிலம் இருக்கு. சொந்த வீடு இருக்கு. கிணறு மோட்டார் பம்பு. டிராக்டர் ட்ரெய்லர் எல்லாம் இருக்கு. சாத்துகுடி தோட்டம் இருக்கு. அப்ப ஏன் இங்க வந்து எச்ச தட்டு தூக்கறேன்னு கேக்கறீயா.'' ஜெகநாதன் மிகத் தந்திர மாக பன்மையிலிருந்து ஒருமைக்குத் தாவினான்.

''சினிமா ஆசை மனோகரி. ஐ வக் டு பிலிம் எ பிலிம் டைரக்டர். பாலசந்தர் மாதிரி. ஸ்ரீதர் மாதிரி. பாரதிராஜா மாதிரி ஒரு டைரக்டர் ஆகணும். என்னைப் பத்தி உனக்கு தெரியாது மனோகரி. இது வரைக்கும் நாலு படத் துல அசிஸ்டெண்ட் டைரக்டரா இருந்திருக்கேன்.''

அவன் வேலைசெய்த இரண்டு படமும், வேலை செய் யாத படமும், சேர்த்து சொன்னான். மனோகரி அவனை திகைத்தபடி பார்த்தாள்.

''உங்க ஹோட்டல்ல நான் வேலை செய்யறதுக்கு மெட்ராசுக்கு வரலை. இன்னும் ரெண்டு மாசத்துல வேலையை விட்டுடப் போறேன். கமல் படத்துக்கு அசோசி யேட் டைரக்டரா ஒர்க் பண்ணப் போறேன். ரெண்டு படம் அசோசியேட் டைரக்டரா ஒர்க் பண்ணாபோதும். மூணா வது படம் எனக்கே கிடைக்கும். ரெண்டு வருஷம். ரெண்டே வருஷம் உங்க ஹோட்டலுக்கு நான் கார்ல வந்து இறங்குவேன். இதுயாரும் தடுக்க முடியாது மனோகரி. நான் கர்வத்துல பேசலை. நம்பிக்கையில பேசறேன்!''

''உங்க பெரியவர் அவருதான் ஏதாவது சாப்பிட கேட் டுகிட்டே இருப்பார். மத்தியான சாப்பாட்டை தவிர உங்க ஹோட்டல்ல நான் எதையும் சாப்பிடறதே இல்லை. நீ



பளீர்னு அடிச்சதும் எனக்கு சிரிப்பு வந்துடுச்சு. என்ன பெரிய ஹோட்டல். என்ன பத்தி நம்மள போய் இதை திருடற ஆளா நினைச்சிட்டாங்களே.''

''ஐயாம் சாரி.''

''தட்ஸ் ஆல் ரைட் என்ன சாப்பட்றீங்க.''

''ஐயோ ஒன்னும் வேணாம்.''

''வாசல்ல நல்ல இளநீர் இருக்கு. வாங்கிட்டு வரச் சொல்றேன்.''

ஆஸ்பத்திரி ஆயாவிடம் அம்பது ரூவாய் கொடுத்து உடனே வாங்கிவரச் சொன்னாள்.

''நான் டென்த்துன்னு உங்களுக்கு எப்படி தெரியும்.''

''முதல்ல நான் காலேஜின்னுதான் நினைச்சேன். அப்புறம்தான் பெரியவர் சொன்னார்.''

''என்னை பார்த்தா சிக்ஸ்டீன் மாதிரி தெரியலையா.''

''முகத்தை பார்த்தா சிக்ஸ்டீன்தான். முழு ஒயிட் கவுன்ல முடி பறக்க ஓடி வந்தியே அப்ப பியூட்டி குயின் மாதிரி இருந்தே.''

''எனக்கு உங்களை ரொம்ப புடிச்சது ஜெகன். ரமேஷ் தராசை எடுத்துட்டு வரவேயில்லை. நீங்கதான் அந்த மெஷின் எடுத்துட்டு வந்தீங்க. அவ்வளோ வெயிட்டை இவ்வளவு ஈஸியா தூக்கிட்டு வறாரேன்னு கூட நினைச்சேன். என்னவோ ஒரு முட்டாள் தனம் டக்குனு கை நீட்டிட்டேன். ஆனா மாடிப்படியில ஏன் வழுந்தீங்க.''

''எனக்கு காதுல லேசா ஒரு பெயின் இருந்தது. முதல்ல அங்கதான் வலிச்சது. அந்த வலியினால தான் புட்டினல் வந்துடுச்சி. முதல்படி கால் எடுத்து வைச்ச உடனே சிலிப் ஆயிடுச்சு. காது சரியில்லைன்னா தலைசுத்துமாம். பெரிய டாக்டர் சொன்னார்.''

''அந்த அட்டெண்ட் பண்ணாங்களா.''

''ஆ மருந்து போட்டாங்க.''

''இந்த ஆஸ்பத்திரி செலவெல்லாம் எங்களது.''

''தேங்க்யூ.''

''யூனியனுக்கு மேட்டர் போவாதே.''

''என்ன மனோகரி. நான் தடுக்கி விழுந்துட்டேன். அதனால அடிபட்டிருக்கு.''

''தேங்க்யூ. அப்பா ஈவினிங் வரேன்னாங்க.''

''எதுக்கு அனாவசியமா வேணாம்.''

''பாக்கிறது முறை இல்லியா.''

''அதான் நீ வந்துட்டியே. அப்படி தேவையானா முடிஞ்சா ஈவினிங் வா.''

''கமல் படம் எப்போ.''

''இன்னும் ரெண்டு மாசத்துல.''

''அப்புறம் ஹோட்டலுக்கே வரமாட்டீங்களா.''

''படம் முடிஞ்சு உன்னை பிரிவியூ கூப்பிடறதுக்கு வருவேன்.''

''என்ன கதை.''

''ஈவினிங் வாயேன் சொல்றேன்.''

இளநீர் வந்தது. அவள் உறிஞ்சும் அழகை பார்த்துக் கொண்டே அவனும் உறிஞ்சினான். அவள் துள்ளி எழுந்த போது மனசு குலுங்கினான். அவள் இடை அசைய நடந்த போது தடுமாறினான். அவள் சிரித்து போய் வரவா என்று கேட்டபோது விடை கொடுக்க தெரியாமல் விழித்து நின்றான். அவள் இறங்கிப் போவதை வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கார் ஏறி மறைந்ததும் அறைக்கு திரும்பினான்.

அந்த அறையின் அழகை, அவன் உடம்பில் உள்ள துடிப்பை யாரோ பிடுங்கி வெளியே எறிந்தது போல அவனுக்கு தோன்றியது. அவள் அமர்ந்த ஸ்டூலில் அமர்ந்து கொண்டான். சூடாக இருந்தது. கட்டிலில் ஏறி சாய்ந்து கொண்டு அந்த ஸ்டூலில் அவள் இன்னும் இருப்பதாகவே கற்பனை செய்து கொண்டு அவள் அழகை எந்த தடையுமின்றி பார்ப்பது போல் வெட்ட வெளியை பார்த்துக் கொண்டிருந்தான்.

''மனோகரி என்னை புடிச்சிருக்கா. என்னை ஏன் பார்க்க வந்த பயந்து போயா. மனோகரி உன்னை போய் நான் காட்டி கொடுப்பேனா. நான் தட்டு தூக்கிறவன் இல்லை மனோகரி. நான் டைரக்டர். சினிமா டைரக்டர். ஜெகன்னு சொன்னாலே லவ் படம்தான். காதல் படம்னு சொன்னாலே ஜெகநாதன்தான். இந்த தமிழ் நாட்டிலேயே ஏன் தென்னிந்தியாவையே என் படத்தால கலக்குறேன் பார்'' இறுக்கமான பைஜாமாவும், ஜிப்பாவும் போட்டுக்



கொண்டு ஒரு காலை மடக்கி கவரில் வைத்துக்கொண்டு வயலின் வாசிக்க வேண்டும் என்று தோன்றியது.

கதவை சாத்திவிட்டு வெறும் கைகளால் வயலின் வாசித்தான். திடீரென்று வெறும் கையில் கத்தி ஏந்தினான். உன் விழியும் என் வாளும் சந்தித்தால் என்று பாட்டு பாடினான். நாலா பக்கமும் எதிரிகளை தூந்தி அடித்தான். கத்தியை உறையிலிட்டு கைகட்டி நின்றான்.

பெரிய ராஜசபையின் முன்பு குற்றம் சாட்டப்பட்டு நிற்பது போல் நினைத்துக் கொண்டான். அந்த சபையின் சிம்மாசனத்தில் மனோகரியின் உறவுக்கார பெரியவர் உட்கார்ந்திருந்தார்.

''ஜெகன் நீ செய்தது மிகப்பெரிய அநியாயம் என்று சீறினார்.''

இவனை கசையால் அடியுங்கள் என்று கட்டளையிட்டார். ஜெகநாதன் அவர் கட்டளைக்கு கையைக் கட்டிக் கொண்டு வாய்விட்டு சிரித்தான். கதவு சாத்திய அறைக்குள் அவனது சிரிப்பொலி எதிரொலித்தது.

''உடம்பு குணமாயிடுச்சா.'' அவன் சிரிப்பை ஒரு புறம் தடுத்து நிறுத்தியது.

ஆஸ்பத்திரி ஆயா இளநீர் வாங்கியது போக பாக்கி சில்லரையோடு ஜன்னல் அருகே நின்றிருந்தாள்.

''காலையில சட்டையெல்லாம் ரத்தமா வந்த. இப்போ சுவத்த பாத்து சிரிக்கற. உடம்பு நல்லா ஆயிடுச்சா.''

''என்னா வேணும் உனக்கு.''

''பாக்கி சில்லரை.''

''நீயே வைச்சுக்க.''

''ஒரு இளநீர் ஆறு ரூபா. இரண்டு இளநீர் பன்னிரெண்டு ரூபா. பாக்கி முப்பத்தெட்டு ரூபா இருக்கு.''

''நீயே வைச்சுக்கன்றல்ல.''

''மொத்தத்தையுமா.''

''ஆமாம். நீயே வைச்சுக்க.''

ஆஸ்பத்திரி ஆயா ஜன்னலைவிட்டு நகர்ந்தாள். அவள் மறுபடி கூப்பிடுவானோ என்ற சந்தேகத்துடன் திரும்பி பார்த்தாள். அவளை வேறொரு ஆயா என்ன விஷயம் என்று கேட்க,

''அந்த பையனுக்கு மண்டையில அடிபட்டு இட்டாந் தாங்க. இப்போ பேஜார் ஆயிடுச்சு போல. தானா பேசி சண்டை போட்டுனுருக்கான். இப்படித்தான் ஒரு மண்டைக் காயம் பேஷண்டுகிட்ட நான் தனியா போய் மாட்டிகினேன். புடவையை சுத்தமா உருவிட்டான். கட்டிலில் இருந்த அவன் வேஷ்டியை எடுத்து நான் மேல போட்டுகினு ஓடியாந்துட்டேன்.''

எதிர்பட்ட இன்னொரு ஆயா மிகுந்த கவனத்தோடு ஜன்னல் கதவு வழியாக அவன் இருக்கின்றானா என்று தேடினாள். முதல் ஆயா பேசியதை காது கொடுத்து கேட்ட ஜெகன், இன்னொருத்தி எட்டி பார்ப்பதை பார்த்து கோபமானான். துண்டை உருவி முகத்தை மூடிக் கொண்டான். அந்த ஆயா ஜன்னல் வழியே எட்டி பார்க்கிற போது துண்டு மூடிய முகத்தோடு இவனும் எட்டிப் பார்த்தான். ஏய் என்று சத்தமிட்டான். அந்த ஆயா விதிர்த்து பின்னே ஓடினாள். அந்த பகுதி இளம் டாக்டர் மீது முட்டிக் கொண்டாள்.

அந்த டாக்டர் என்ன இது என்று கூச்சலிட்டபோது, அந்த ரூம் பேஷண்ட் தானா பேசிக் கத்துறான். புடவையை உருவிடுவேன்னு கத்தறான் என்று படபடப்பாக சொன்னாள்.

அந்த டாக்டர் எட்டி பார்த்தபோது ஜெகன் கட்டிலில் படுத்து விட்டத்தை பார்த்துக் கொண்டிருந்தான். சற்று முன் அவனால் வெளியே தகர்த்தப்பட்டது ஞாபகம் வந்தது.

நோயாளிக்கு மனநிலையில் மாற்றங்கள் இருக்கின்றன. தனியே உரத்து பேசுகின்ற சுபாவம் அதிகரித்திருப்பதாக தாதிகளால் சொல்லப்பட்டது.

''நான் பார்த்தபோது நோயாளி விட்டத்தை நோக்கி பாட்டுபாடிக் கொண்டிருந்தார்.'' இது தனியே கவனிக்கப் பட வேண்டும், என்று குறிப்பெழுதினான்.

''கார்னிவில் ஹோட்டல் பேஷண்டா'' என்று அதை படித்த தலைமை டாக்டர். மனோ தத்துவ நிபுணர் வரவேண்டும் என்று எழுதினார்.

ஆஸ்பத்திரி ஒரு டாக்டருக்கு தகவல் அனுப்பியது. மாலையில் மனோகரியின் அப்பாவும், மனோகரியும், மனோகரியின் மாமாவும் வந்தபோது வராண்டாவிலேயே தடுக்கப்பட்டனர். மனோ தத்துவ டாக்டர் சோதித்து கொண்டிருப்பதாக சொல்லப்பட்டது.



''எதுக்கு மனோ தத்துவ டாக்டர்'' மனோகரியின் அப்பா விசாரித்தார்.

''அந்த ஆள் ரூம்ல சுத்தி சண்டை போடுறான். ஊ...ம்...ஹான்னு கிரிக்கிறான்'' என்று ஆயா சொன்னாள்.

மனோகரிக்கு அவனை உடனே பார்க்க வேண்டும் என்று ஆசை வந்தது.

உள்ளே அந்த மனோ தத்துவ டாக்டர் ஆள்காட்டி விரலை உயர்த்தி ஜெகநாதனுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு தன் விரலை இடது கோடியிலிருந்து வலது கோடிக்கு நகர்த்திக் கொண்டிருந்தார். ஜெகநாதனின் கண்கள் அந்த விரல் நகர்வையே தொடர வேண்டும் என்று கட்டளையிட்டார். ஜெகநாதன் அவர் விரல் நகரும்போது அவன் விழிகளை நகர்த்தினான். இடது கோடிக்கு கண்கள் நகர்ந்தபோது ஜன்னலில் மனோகரியின் முகம் தோன்றியது. ஜெகநாதன் டாக்டருடைய விரலையும், டாக்டரையும் சுத்தமாக மறந்தான்.

''மனோகரி'' என்று கூவியபடி துள்ளி எழுந்தான். டாக்டருக்கு பகீரென்றது. அவன் வேகம் பயம் கொடுத்தது.

''ஒன் செகண்ட் டாக்டர்.'' ஜெகநாதன் டாக்டரிடம் சொல்லிவிட்டு சட்டையை மாட்டிக் கொண்டு வராண்டாவிற்கு ஓடினான்.

மனோகரி அதற்குள் ஓடிப்போய் வராண்டா திரும்பியதும் மெள்ள நடந்து அப்பாவுக்கு அருகிலேயே அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

''என் பிரெண்டோட அண்ணன் இங்க டாக்டர்பா, அவர் இருக்காறான்னு பார்க்கப் போனேன்'' அவர் கேட்பதற்கு முன் பொய் சொன்னாள்.

ரொம்ப சாதுவான பெண்போல மேஜை மீதிருந்த ஞான ஒளி பத்திரிகையை எடுத்து படிக்கத் துவங்கினாள்.

ஜெகநாதன் ரிசப்ஷனுக்கு வந்து மனோகரியின் அப்பாவின் முன்பு வாங்க சார் என்று கை கூப்பினான். லுங்கியும் பட்டன் போடாத சட்டையும் தலையில் கட்டும், கலைந்த கேசமுமாய் இருந்த ஜெகநாதனை பார்த்து அவர்கள் திகைத்தார்கள். லேசான கலவரத்தோடு அவர்கள் எழுந்து நின்றார்கள்.

"உள்ள வாங்க சார்." ஜெகநாதன் மறுபடியும் வரவேற்றான்.

"டாக்டர் செக் பண்றதா சொல்லலைங்களே."

"ஒன்னும் முக்கியமா இல்லை சார். ஜெனரல் செக் அப். உள்ள வாங்க சார்."

ஜெகநாதன் அறைக்குள்ளிருந்த டாக்டர் மெள்ள வெளியே வந்தார். ஒரு டாக்டர் செக் பண்ணுகிறபோது கூடவே ஒரு நர்ஸ் வரவேண்டும். இந்த நர்ஸிங்ஹோமில் ஏகப்பட்ட பேர் இருந்தும் யாரும் வரவேயில்லை. வெளி டாக்டருக்கு மரியாதையே இல்லை. வராண்டாவில் நின்ற தாதிகளை பார்த்து

"அந்த ஆளை போய் கையோட புடிச்சிணு வாங்க" என்று கட்டளையிட்டார்.

அந்த இரண்டு தாதிகளும் ஜெகநாதனுக்கு அருகே போய் நின்று கொண்டார்கள்.

"டாக்டர் கூப்பிடறார் வாங்க. பாதியிலே எழுந்து வந்துட்டீங்களே."

மனோகரிக்கும், மனோகரி அப்பாவுக்கும் உள்ளே லேசாய் ஒரு பயம் வந்தது.

❖ ❖ ❖ ❖

# 6

உலகம் விசித்திரமானது. வர்ண பூச்சு கொண்டது. ஆடை உடுக்கும் தன்மை உடையது. மேனா மினுக்கித் தனம் நிறைந்தது. மண்ணும், செடியும், மரமும், இலையும், பூவுமாய் உடுத்துக் கொள்கின்றன. மலைகள் மேகத்தையும், பனியையும் போர்த்திக் கொள்கின்றன. பச்சை வர்ணத்துக்கு நடுவே சிகப்பும், நீலமுமாய் கண்ணைப் பறிக்கிற விதமாய் பூக்கள் பூத்து கவர்ச்சி காட்டும்.

இந்த கவர்ச்சிதான் மனிதனிடம் உடையாக ஒட்டிக் கொண்டுவிட்டது. இந்த உடையின் சீரமைப்பை வைத்து



தான் மனிதர்களை எடை போடுவது நடக்கிறது. உடைகள் சீராக இல்லையெனில் எடையில் தாழ்தல் ஏற்படுகிறது. உடையை வைத்துதான் மனிதன் என்பது உருவாகிவிட்டது.

மனோகரியை பார்க்கிற அவசரத்தில் அவன் தன்னை பார்க்காது போய்விடக்கூடாதே என்கிற பதட்டத்தில் ஜெகநாதன் தன் உடைகளை பற்றிய அக்கறை இல்லாது ஆஸ்பத்திரி வராண்டாவிற்கு ஓடி வந்தான்.

மனிதர்களைப் பதட்டம் மிக மோசமான ஆளாக காட்டும். நாலு பேருக்கு நடுவே பதட்டமாய் இருக்கிறவனை பதட்டமில்லாது இருப்பவர்கள் கேலியாய் பார்ப்பார்கள். அந்த பதட்டத்துக்கு காரணம் எவ்வளவு பெரிய விஷயமாய் இருந்தாலும் பதறாதவர்களுக்கு அது அற்பமாகத் தான்படும்.

அதுவும் தவிர ஜெகநாதன் அறையில் முகம் பார்க்கிற கண்ணாடி இல்லை. நிலைக்கண்ணாடி இருந்திருந்தால் போய் பார்க்கிற ஒரு ஆசை வந்திருக்கும்.

ஜெகநாதன் அந்த இரண்டு ஆயாக்கள் வந்து பிடித்த போது அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் மெல்லியதாய் எங்கோ ஒரு தப்பு நடக்கிறது என்பதை மட்டும் புரிந்துகொள்ள முடிந்தது.

"ஜெகநாதன் அவங்க கூப்பிடறாங்க அவங்களோட போங்க" மனோகரியின் அப்பா அவன் தோளை தட்டிக் கொடுத்தார்.

ரிசப்ஷனில் உள்ள அத்தனை பேரும் தன்னையே பார்ப்பது பார்த்து ஜெகநாதன் துணுக்குற்றான்.

"டாக்டர் போன பிறகு வரேன் சார்" பின் வாங்கினான்.

திரும்பி வராண்டாவில் நடக்கும்போது ஒரு டாக்டரிடமிருந்து வந்தது மிக தவறு என்று புரிந்து கொண்டான். அறைக்குள் நுழைந்து மன்னிப்புக் கேட்டு கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

"என்னையா திமிர்ந்து அப்படி ஓடிட்டீரு." டாக்டர் லேசாக கோபமாய் கேட்டார்.

"தப்புதான் சார்."

"யாரை பார்த்து அப்படி ஓடினீர்."

ஜெகநாதன் அவர் கேள்விக்கு மவுனமாய் இருந்தான்.

''பரவாயில்லை மனசை விட்டு சொல்லு யாரை பார்த்து ஓடினீர்.''

''எங்க முதலாளியோட மகள்.''

டாக்டர் நிதானித்தார். மெல்ல சிரித்தார்.

''என்ன வயசு.''

''பதினெட்டு பத்தொன்பது இருக்கும் டாக்டர்.''

''லவ்வா.''

''இல்லை டாக்டர்.''

''பிறகு.''

''ஒரு ஆசைதான்.

டாக்டர் இப்போது பெரிய புன்னகை செய்தார்.

''உனக்கு ஒன்றும் உடம்புக்கில்லையா, தலைவலி, மயக்கம் ஏதாவது இருந்தா இங்க வந்து பாரு.''

''என்னவா இருக்கீங்க.''

''ஹோட்டல் கார்னிவல்ல ஓர்க் பண்றேன் சார்.''

''என்னவா.''

''பேரர் சார்.''

''நினைச்சேன். பேரருக்கு ஹோட்டல் முதலாளி மேல ஆசையா.''

''தப்பா சார்.''

''தப்புதான். ஒரு ஆசையை இவ்வளவு வேகமா சொன்னா தப்புதான்.''

''நான் சொல்லலையே சார்.''

''வெளியே காட்டிட்டீங்களே.''

ஜெகநாதன் திகைத்தான்.

''தபதபன்னு வெளியே ஓடினீங்களே ஓடறதுக்கு முன்னால குனிஞ்சு பாத்துகிட்டீங்களா. லுங்கி சரியா கட்டாம, சட்டைக்கு பட்டன் போடாம, முதலாளி பொண்ணைப் பார்க்க போவாங்களா.''

''முதலாளியும் வந்திருக்கார் சார்.''

''இன்னும் மோசம். அவங்க இங்க வர்ற வரைக்கும் உங்களால காத்திருக்க முடியாதா, அவங்களை அமைதியா நீங்க ரிசீவ் பண்ணியிருக்க கூடாதா.''



''புரியுது சார்.''

''என்ன படிச்சிருக்கீங்க. பிளஸ் டூவா.''

''எம்.ஏ. பொலிடிகல் சயின்ஸ் சார். மதுரை காமராஜர் யுனிவர்சிட்டி.''

''அப்படியா. அப்ப ஏன் ஹோட்டல் வேலை.''

ஜெகநாதன் மௌனமாக இருந்தான்.

''எந்த ஊர்.''

''தென்காசி சார்.''

''திருநெல்வேலியா.''

அந்த டாக்டருக்கு தன் பக்கத்தூர் பையன் என்கிற சந்தோஷம் ஒட்டிக் கொண்டது. டாக்டர் அந்த ஊரை உச்சரித்த விதத்தில் அவரும் தன்னுடைய ஊர் என்று ஜெகனுக்கு புரிந்துவிட்டது.

''நான் சினிமாவில சேரணும்னு வந்தேன் சார்.''

''அப்புறம் ஏன் தட்டு தூக்கறீர்.''

ஜெகநாதன் தன் சுய சரித்திரத்தை சுருக்கமாக சொன்னான். நடுவில் சினிமா தொழிலில் ஒரு இடைவெளி விழுந்ததையும், மீண்டும் ஒரு பாய்ச்சலுக்காக காத்திருப்பதையும் சொன்னான்.

''அப்ப ஒழிஞ்ச நேரத்துல ஒரு பொட்டை குட்டிய சாய்க்கலாம்னு பாக்கறீரா.''

''ஆமாம் சார்.''

''என்ன ஆமாம் சார்.'' எக்குதப்பா போச்சனா முட்டி பேத்திரும்ல.''

''லவ் பண்ணாட்டி நான் செத்திருவேன் சார்.''

''அப்படி ஒன்னு உண்டோ''

''ஆமாம் சார்''

''கோடிட்டு விளக்குக''

''சார்?''

''தெளிவா சொல்லேன்யா.''

''மனுஷாள் சந்தோஷமா இருக்கணும். அல்லது துக்கமா இருக்கணும். வெறுமையா இருக்க கூடாது சார்.''

''என் அப்படி.''

''சந்தோஷத்துல கிரியேட்டிவிட்டி வரும். துக்கத்துல கிரியேட்டிவிட்டி வரும். வெறுமையில ஒன்னும் வராது சார். மனோகரி லவ் பண்ணா சந்தோஷம். நீ போடான்னா துக்கம். இது ரெண்டுமே என்னை உயிர்ப்போட வைக்கும் சார்.''

''சபாஷ். மனோகரிங்கிற அம்மா யாரு.''

''அது அம்மா இல்லை சார். நான் ஆசை படற பொண்ணு.''

டாக்டர் வாய் விட்டு சிரித்தார். அந்த சிரிப்பு வராண்டாவில் எதிரொலித்தது. அந்த ஆயா எழுந்து ஜன்னல் சந்து வழியே அறைக்குள் பார்த்தாள்.

''இது ஒட்டுவாரொட்டி வைத்தியம் போல. இப்ப டாக்டர் சிரிக்கிறார் பார்.'' தனக்கு தானே பேசிக் கொண்டாள்.

''ஜெகநாதன் ஈரத்துணியால முகத்தை லேசா தொடைச்சிட்டு வாரும். பேண்ட் சட்டை இருக்கா.''

''இருக்கு சார்.''

''உடுத்திகிட்டு. தலையை கையாலேயே படிய வைச்சிட்டு வாரும்.''

''எதுக்கு சார்.''

''ரெண்டு விஷயம். ஒன்னு எக்ஸ்-ரே எடுக்கணும். ரெண்டு கெட்டுப் போன உங்க பேரை நிமித்தி வைக்கணும்.''

''எதுக்கு சார் எக்ஸ்-ரே''

''வேற ஒரு ஆங்கிள்ல எக்ஸ்-ரே எடுத்து என் திருப்திக்கு பார்க்கணும். நம்ம ஊர் பையன் ஜெயக்கிறானோ, தோக்கிறானோ பேக்காண்டின்னு பேர் வாங்க கூடாது. சட்டுனு கிளம்பும்.''

வெள்ளை சட்டை போட்டு, நீல பேண்ட் அணிந்து நெற்றி விலிக்காமல் கேசம் வாரி. லேசாய் பவுடரை முகத்தில் அப்பி ஜெகநாதன் தயாரான போது, டாக்டர் ஒரு பையை திறந்து ஒரு சின்ன விபூதி பொட்டலம் எடுத்து கொடுத்தார்.

''இது வடபழனி முருகன் கோவில் பிரசாதம். நேத்து யாரோ கொடுத்தாங்க உபயோகபடுத்து.''

ஜெகநாதன் கட்டுக்கீழே ஒரு கீறல் விபூதி இட்டு



கொண்டான்.

''ஒரு பத்து நிமிஷத்துல எப்படி மாறி போயிட்டீர் தெரியுமா. ஒரு கெட்டிக்கார ஆம்பளைக்கு அண்டர்லைன் டிரஸ்மட்டுமே அழகு இல்லை. அமைதியான சுபாவம்தான் அழகு. பொம்பளைய பார்த்தவுடனே பின்னாலேயே ஓடிப் போய் காமமாத்தி நிக்க படாது. நல்ல ஆம்பளை அப்படி செய்ய மாட்டான். நாய்தான் செய்யும் அண்டர்லைன் நாய் தான் செய்யும்.''

டாக்டர் குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

''வீல் சேரில் உட்கார்ந்து ரிசப்ஷன் வழியாதான் வருவீர். அப்போ கம்பீரமா நடந்துக்கணும். நடந்துக்க தெரியுதான்னு நான் பாக்கிறேன். தெரியலைன்னா நான் சொல்லித் தரேன். உம்மேல ஏன் பிரியம்னு உனக்கு புரியுதா.''

''திர்நவேலி'' ஜெகநாதன் பதில் சொன்னான்.

''கரெக்ட். தாம்பிர பரணி அந்த தண்ணி குடிச்சவன் பேக்காண்டியா இருக்க கூடாது.'' டாக்டர் வெளியேறினார். ஜெகநாதனை வீல் சேரில் அழைத்து வரும்படி ஆயாவுக்கு உத்தரவிட்டு ரிசப்ஷன் தாண்டிப் போனார்.''

'அடடே... ரொம்ப சின்னப் பொண்ணா இருக்கே. மனோகரியை ஓரக்கண்ணால் பார்த்து விட்டு எடை போட்டார்.

வீல்சேர் வந்தது. ஜெகநாதன் அமர்ந்து கொள்ள இளநீர் வாங்கி தந்த ஆயா அவனை தள்ளிக் கொண்டு போனாள்.

ரிசப்ஷனில் உட்கார்ந்து கொண்டிருந்த மூன்று பேரும் எழுந்து நின்றார்கள். மனோகரியின் வயதான தாய்மாமன் கைநீட்டி வீல்சேரை நிறுத்தினார்.

''என்ன ஜெகநாதன் எங்க இட்டுனு போறாங்க உன்னை.''

''எக்ஸ்-ரே எடுக்க கூட்டினு போறாங்க சார்.''

''ஒன்னும் பிரச்சினை இல்லையே.''

''ஒரு பிரச்சினையும் இல்லை சார். மண்டையில அடிபட்டதுன்றதால எல்லா டெஸ்டும் பண்ணி பாத்துடறாங்க.''

''வேற ஒரு வேதனையும் இல்லையே.''

''சின்ன பிரச்சினை கூட இல்லை சார் ரெஸ்ட் எடுக்க

னும் அவ்வளவுதான். நீங்க யாருமே ஆஸ்பத்திரி வரைக்கும் வந்து கஷ்டப்பட வேணாம்."

"அந்த பையன் எடிசன் மேட்டரை யூனியனுக்கு எடுத்துனு போயிட்டாம் போல. யூனியன்ல பேசறும்னாங்க. அதுக்கு முன்னாடி உன்னைப் பார்த்துட்டு வந்துடலாம்னு." மனோகரியின் அப்பா மிகவும் சாமர்த்தியமாக பேசினார்.

"எதுக்கு யூனியன், யாராவது கேட்டா நான் கால் தடுக்கி வழுந்துட்டேன்னு சொல்றேன். மனோகரி நீங்க தேவையில்லாம பயப்படாதீங்க. சார் எக்ஸ்-ரே முடிச்சுட்டு வந்துடட்டுமா." ஜெகநாதன் வண்டியை திருப்பினான். ஆயா தள்ளி கொண்டு போனாள்.

"கரெக்ட். அவ்வளவுதான் போதும். அப்பதான் மரியாதை." தனிமையில் நின்று சகலமும் பார்த்து கொண்டிருந்த டாக்டர் கண்சிமிட்டி பாராட்டினார்.

"டாக்டர் உங்க பேரு சொல்லவேயில்லையே."

"எதுக்கு பேர் சொல்லி கூப்பிடறதுக்கா."

"யார் கூட பேசறோம்னு தெரிய வேண்டாமா. அதுக்காகதான் டாக்டர்."

"எம் பேரு டாக்டர் ராஜசேகர். இந்த டேபிள்ல படுங்க. இந்த எக்ஸ்-ரே எடுத்ததும் ஸ்கேனுக்கு வாங்க."

"பிரச்சினை எதாவது இருக்கும்னு சந்தேகப்படறீங்களா டாக்டர்."

"நிச்சயமா இல்லை. ஆனாலும் கம்ப்ளீட்டா செக் பண்றது நல்லது இல்லையா."

ஜெகநாதன் மேஜையில் ஏறிபடுத்துக் கொண்டான்.

"பெண்களை கவர்ந்து இழுப்பது ரொம்ப சுலபம் ஜெகநாதன். ஒரு கோமாளி கூட ரொம்ப சுலபமா பண்ணிடுவான். ஒரு முரட்டு வீரன் அவங்களுக்கு ரொம்ப பிடிக்கும். விலகி ஒதுங்கிறவனைக் கண்டாலும் அவங்க ரொம்ப சந்தோஷமாயிடறாங்க. பெண்கள் யாரைக் கண்டு பயப்படறாங்கன்னு உனக்கு தெரியுமா."

"தெரியலை டாக்டர்."

"கெட்டிக்காரர்களை கண்டால் பயப்படறாங்க."

"ஏன் டாக்டர்."

"அவங்களுக்குள்ள தற்காப்பா ஒரு கெட்டிக்காரத்த



னம் ஒட்டிருக்கு அதுபோல ஒரு கெட்டிக்காரத்தனம் இன்னொரு ஆள்கிட்ட பார்த்தா அவங்களுக்கு புடிக்காது. அதனால்தான் ஒரு பெண் இன்னொரு பெண்ணை ஆழமாக நேசிப்பதேயில்லை. ஒரு தற்காப்பு கருதிதான் இன்னொரு பெண்ணின் தோழமை அவளுக்கு தேவையாயிருக்கிறது. தன்கெட்டிக்காரத் தனம் தனக்குப் பாதுகாப்பு. தன்னைப் போலிருக்கிற இன்னொரு பெண்ணின் கெட்டிக்காரத்தனம் தனக்குப் பாதுகாப்பு."

ஜெகநாதன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். எக்ஸ்ரே முடிந்து வீல் சேரில் அமர கட்டிடத்தின் மேல் பக்கமுள்ள ஸ்கேனிங் ரூமுக்குப் போனார்கள்.

"ஒரு ஆணுக்கு பெண் சிநேகிதம் அவசியமென்ன ஜெகநாதன்."

"போகம்" ஜெகநாதன் பதில் சொன்னான்.

"உண்மை. ஆனால் போகத்துக்காக மட்டுமே பெண்கள் என்றால் அவர்களுக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்க வேண்டிய அவசியமில்லை."

"வம்சவிருத்தி" ஜெகநாதன் வேறு பதில் சொன்னான்.

"என்னைப் போலவே இன்னொரு பதுமை வேண்டும் என்ற ஆவல்தான் வம்ச விருத்தி. அதற்காக கல்யாணம் செய்து கொண்டால் போயிற்று. காதல் செய்வானேன். கல்யாணம் செய்து கொண்ட பெண்ணை காதலிப்பானேன். காதலுக்கு வேறெதுவோ காரணமிருக்கிறது. என்னவென்று யோசனை செய்துபார். நீ ஒரு சினிமா டைரக்டர் காதலின் காரணத்தைக் கண்டுபிடி."

ஜெகநாதன் யோசித்தான்.

"என்னை பற்றி நான் யாரிடமாவது பேச வேண்டியிருக்கிறது. என் அடிமனது ஆசையை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது."

"ஏன் பகிர்ந்து கொள்ள வேண்டும். என்னால் பகிராமல் இருக்க முடியவில்லை. என்னால் தனிமையை தாங்க முடியவில்லை."

"மிகச் சரியான பதில். இன்னும் சற்று ஆழமாக யோசி. இந்த பகிர்தலுக்குப் பெண் வேண்டுமா. ஆண் போதாதா."

"என் பகிர்தலுக்கு என்னோடு போட்டியிடாதவர் வேண்டும். என்னைக் கண்டு பொறாமைப் படாதவர் வேண்டும். பெண் ஆணுக்கு போட்டியில்லை. மாறாக துணை."

"அதுமட்டுமில்லை ஜெகநாதன் வாழ்க்கையில் வெற்றி பெறுவது என்றால் போர் செய்வது என்றே பொருள். முயற்சி இல்லாது வெற்றி பெற முடியாது. முயற்சி உண்டெனில் அங்கு வலி, வேதனை உண்டு. வலி வேதனை உண்டெனில் அங்கு சோர்வடைதலும் உண்டு. சோர்வுற்ற நேரத்தில் அம்மாவை போல் அணைத்துக் கொள்ள பெண்ணால் முடியும். சிறு வயதில் பரிச்சயமான அம்மா என்கிற தன்மையை நீ காதலிக்கும் பெண்தான் தரமுடியும். உன் முகத்தை தன் நெஞ்சோடு அணைத்து உன் முதுகு வருடி உன் சோர்வு நீக்க அவளால்தான் முடியும். இந்த சோர்வு நீக்குகிற, மறுபடியும் புதுபலம் கூட்டுகிற, எந்த வெட்கமுமின்றி உன்னை அணைத்து கொஞ்சுகிற உன் வெற்றியை உண்மையாய் விரும்புகின்ற, நீ உயர்ந்தால் நானும் உயரலாம் என்ற எண்ணம் கொண்ட பெண்தான் காதலி. அம்மா என்கிற வேறொரு வடிவம்.

சோர்வை நீக்குவதாலும், நீக்குவாள் என்று தெரிந்ததாலும் வெற்றியை அவளோடு தான் பகிர்ந்து கொள்ள முடியும். அவள் மருந்து, டானிக், உந்துசக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி, ஆதி சக்தி, பராசக்தி இன்னும் என்னென்னவோ.

அம்மா என்கிற விஷயம் உலகத்தில் உள்ள எல்லா ஆணுக்கும் மறைமுகமாய் ஊட்டப்பட்டு விட்டது. அம்மாவின் அருமையை உணர்ந்தோர் எல்லாருக்குமே காதலிக்கத் தோன்றும். வியப்பு வேண்டும் என்ற ஆசை உள்ளோர் எல்லோருக்கும் காதலி தேவைப்படும். மாறாய் வெறுமை அடைந்தவர்களுக்கு எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது இனி தெரிந்து கொள்ள ஒன்றுமில்லை என்று கர்வப்படுபவர்களுக்கு, மனைவியோ, காதலியோ தேவைப்படாது. பெண்ணை போகப் பொருளாகத்தான் அவர்கள் நினைப்பார்கள். உபயோகப்படுத்திவிட்டு வீசுகிற அவசரம்தான் கொள்வார்கள் அல்லது வக்கிரமாகத்தான் உபயோகப்படுத்துவார்கள். அவர்கள் அம்மாவால் புறக்கணிக்கப்பட்டிருக்க கூடும். அல்லது தாய் என்ற ஸ்தானத்திலிருந்து நழுவி அவள் கள்ள உறவு கொண்டிருப்பதையோ, கபடமாக நடத்ததையோ ஒரு பிள்ளை கண்டிருக்க கூடும். இவர்களால் காதலிக்க முடியாது.

உன் தனிமையை தாங்க முடியாமல் உன் சிறு வயதில் உணர்ந்த அம்மா மாதிரி ஒரு பெண்ணை ஆதரவு தேடி அலைவதற்குப் பெயர்தான் காதல்.

❖ ❖ ❖ ❖



# 7

எனவே காதல் என்பது பற்றி எந்த ஆவேசமும் படாமல் எந்த தப்பர்த்தமும் கொள்ளாமல் உடலின் விழைவு, மனதின் விழைவு இரண்டும் ஒரே பெண் மீது வரும் காரணத்தைப் புரிந்து கொண்டு ஆரோக்கியமாக அதை அனுபவிக்க வேண்டும்.

"அனுபவம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் அந்த ஆரோக்கியம் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். பாதுகாப்பாக நீ இருக்கிறாயா என்று பார்த்துகொள் ஜெகநாதன்."

"இந்த வாழ்க்கையில் காசு ஒரு பாதுகாப்பு. உடம்பு ஆரோக்கியம் ஒரு பாதுகாப்பு. உறவுகள் ஒரு பாதுகாப்பு. காசில்லாதவன் காதல் செய்ய கூடாது. அப்படி காதலித்தால் உறவுகளைப் பகைத்துக் கொள்ள வேண்டும். உறவுகளோடு பிணங்குவது ஆரோக்கியத்தைச் சீருலைக்கும். பிறகு ஜெயிப்பது என்பது சம்பாதிப்பது என்பது உயர்ந்த லட்சியங்களை எட்டிபிடிப்பது என்பது உடைந்து போய்விடும்."

"ஜெகநாதன் நீ எம்.ஏ. படித்தவன் என்பதால் சொல்கிறேன். லட்சியங்கள் உடையவன் என்பதால் சொல்கிறேன். அந்த சின்னப் பெண் மீது காதல் என்று அலையாமல் வேறு ஏதேனும் பிடிப்பு வைத்து உற்சாகப்படுத்தி கொள்ள முடியுமா என்று பார். காதல் என்பது கொள்ளை அன்பு, பிரியம் இதை செய்துவிட்டு அழக்கூடாது. எழுந்து நடந்து போ, காதலில் மட்டுமல்ல எங்கேயுமே பதறாமல் இருக்க கற்றுக் கொள்."

"வேகம் ஏற்படும் போதே, எதற்கு இத்தனை வேகம் என்று அதனைக் கவனி. அடக்காதே கவனி. அடக்கியது மறுபடியும் சீறும். உள்ளே உற்றுக் கவனித்தால் காரணம் புரியும். என் வாழ்த்துக்கள்."

டாக்டர் ஸ்கேன் ஆளிடம் சில உத்தரவு போட்டுவிட்டு வெளியேறினார்.

நடுகடலில் மரக்கட்டையில் தத்தளித்தவனுக்கு துடுப்பு கிடைத்ததுபோல் சந்தோஷம் வந்தது. அவன் எழுந்து நடந்து ரிசப்ஷன் நோக்கி போனான்.

ரிசப்ஷனில் மனோகரி இல்லை. மனோகரியின் அப்பா வும் இல்லை. அந்த பெரியவர் மட்டும் உட்கார்ந்திருந்தார்.

"நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணச் சொல்லி இப்ப உன்னை கூட்டிகினு போனாரே அந்த டாக்டர் சொல்லிட் டாரு. ஒரு வாரம் கவனமா பாத்துக்கணும்னு சொல்லிட் டாரு. உன் ரூம்ல உன்னை யார் பாத்துக்குவா. நீ ஹோட்ட லுக்கு வந்துடு. என் ரூம்ல தங்கிடு நான் உன்னைப் பாத்துக் கிறேன். ஒரு வாரம் தானே."

காலின் கீழ் படகு இருந்தும், கையில் துடுப்பு இருந்தும் தன்னை வாழ்க்கை எங்கேயோ அழைத்துப் போவதாய் ஜெகநாதன் உணர்ந்தான்.

"முதலாளி என்ன சொன்னாரு."

"அவன் என்ன சொல்றது. மனோகரி என்ன சொன்னா லும் சரின்னுதான் சொல்வான்."

"மனோகரி என்ன சொல்லிச்சு."

"அதுக்கு உம்மேல ஒரு இரக்கம். நாம பண்ண தப்பை நாமதானப்ப சரி பண்ணணும். அவரு குணமாவற வரைக் கும் நாமளே பாத்துக்கலாம்ப்பா அப்படின்னுச்சு. நம்ம ஹோட்டல்லயே ரூம் போடலாம்னுச்சி. நான்தான் தனி ரூம் எதுக்கு என் ரூம்ல இருக்கட்டும்னுட்டேன். நான் பாத்துகிட் டது போலவும் ஆச்சு. எனக்கு பேச்சு துணையாவும் ஆச்சு. என்ன நான் சொல்றது."

படகு எங்கயோ இழுத்துக் கொண்டு போகிற நேரத் தில் திசை தெரியாது திகைக்கிற பொழுது, நடுவே ஒரு பெண்ணும் ஏறிக் கொண்டதுபோல் இருந்தது.

வாழ்க்கை ரொம்ப விசித்திரமானது. அதன் போக்கு நம் கையில் இல்லை என்று முதன் முதலாய் ஜெகநாதன் உணர்ந்தான்.

"நாளை காலையில ஆட்டோ வைச்சினு வந்திரு." கிழவர் சொல்லிவிட்டுப் போனார்.

வெளியே இருட்டத் துவங்கியது. ஜெகநாதன் சுருண்டு தூங்கத் துவங்கினான். தூங்குகிற போது கனவு கூட காண முடியவில்லை. மனோகரியின் ஏற்பாடு ஞாபகம்



வரும்போதே, டாக்டரின் எச்சரிக்கையும் நினைவுக்கு வந் தன. கனவுமில்லாமல், தெளிவுமில்லாமல் ஜெகநாதன் தூங் கிப் போனான்.

யாரோ அறைக்குள் நுழைவதுபோல் இருந்தது. மறுப டியும் பச்சையாய் புல்வாசனை அடித்தது. சலபோன் சல லக்கிற சத்தம் கேட்டது. ஜெகநாதன் திடுக்கிட்டு திரும்பி னான். பூங்கொத்தின் மீது மோதிக் கொண்டான். முன்பு கொண்டு வந்ததை போல அதே அளவு பூங்கொத்தோடு மனோகரி நின்று கொண்டிருந்தாள்.

"வா மனோகரி"

"வேணாம், படுங்க."

"மணி என்ன."

"ஏழே முக்கால்."

"எதுக்கு மனோகரி இந்நேரத்துக்கு மேல"

"நான் பாட்டுக்கு ஹோட்டல்ல கொண்டாந்து வைக்க லாம்னு சொல்லிட்டேன். போறபோதுதான் ஞாபகம் வந் தது. நீங்க ஊருக்கு போக ஆசை படுவீங்களோன்னு."

"ஊருக்கா. எதுக்கு ஊருக்குப் போகணும்."

"அப்பா அம்மாவ பார்க்க வேணாமா. உடம்பு சரியில் லாத நேரத்துல வீட்டு ஞாபகம் வராதா என் பாக்கட் மணியி லிருந்து ஒரு ரெண்டாயிர ரூபாய் கொண்டு வந்திருக்கேன். ஒரு வேளை நீங்க ஊருக்குப் போறதா இருந்தா இந்த காசு உதவி செய்யும்."

"இது கொடுக்கவா வந்த" ஜெகநாதன் வியப்போடு கேட்டான்.

"இன்னும் கொஞ்சம் பேசணும்னு தோணிச்சு."

"எங்கூடயா என்ன பேசணும்."

"எங்க ஹோட்டல்ல வேலை செய்யற பேரர் எம்.ஏ படிச்சிருக்கார் என்பதை நம்பவே முடியலை. உங்களுக் குள்ள ஒரு டைரக்டராகணும்கிற ஆசையிருக்கிறதையும் நம்ப முடியலை. எடிசனையும், அந்த ஹவுஸ் கீப்பிங் பொண் ணையும் கூப்பிட்டு பேசினேன். ரெண்டு பேரும் உங்க ளைப் பத்தி நிறைய சொல்றாங்க. அவங்க லவ்வுக்கு நீங்க ஹெல்ப் பண்ணீங்களாமே, அதெல்லாம் சொன்னாங்க. நீங்க நிச்சயமா டைரக்டராயிடுவீங்கன்னு எடிசன் சொல் றாரு. ஜெகனை கை நீட்டி அடிச்சது ஒரு நாளைக்கு ஒரு

புஸ்தகத்துல வரும். ஜெகன் பெரிய ஆளாயிட்டு வாழ்க்கை சரித்திரம் எழுதறபோது நிச்சயம் வரும்னு சொன்னாரு. கொஞ்ச நேரம் அப்செட் ஆயிட்டேன்.''

''அதுக்காகவ வந்த மனோகரி.''

''இல்லை இன்னும் கொஞ்ச நேரம் பேசணும்னு தோணிச்சு. ஹோட்டல்ல மாமா ரூமுக்கு வந்துட்டா அதிகம் பேச முடியாது. அதனாலதான் இங்க பேசலாம்னு வந்தேன். நீங்க ஊருக்குப் போகலைன்னா ஆஸ்பிட்டல்லயே தங்குங்களேன். நான் தினம் வந்து பாக்கிறேனே.''

''என்ன பேசப்போற மனோகரி.''

''எதாவது பேசலாமே. தினம் எதாவது சொல்லிக் கொடுங்களேன். எங்க வீட்டுல காலேஜுக்கு எல்லாம் அனுப்பமாட்டாங்க. பிளஸ் டூ முடிச்சதும் கல்யாணம் கட்டி அனுச்சுடுவாங்க.''

''அவ்வளவு சீக்கிரமாவா.''

''இப்பவே ரெண்டு, மூணு பேர் பெண் கேட்டுட்டு போயிட்டாங்க. மாமாதான் ரெண்டு வருஷம் போவட்டும்னு சொல்லி வைச்சிருக்கார். மூரண்டு புடிச்சா மூணு வருஷந்தான் அதுக்கப்பால நிச்சயமா கல்யாணம் ஆயிடும். நீங்க ஒரு மூணு வருஷத்துல டைரக்டரா ஆயிடமாட்டீங்களா.''

''ஆகலாம், ஆகாதும் போகலாம். ஏன் கேக்கிற.''

''எனக்கு பாக்கிற மாப்பிள்ளையெல்லாம் குண்டா இருக்காங்க. கல்யாணம் ஆகறதுக்கு முன்னாடியே லேடீஸ் காண்டாக்ட் வைச்சிருக்காங்க. இருநூறு பவுன் நகை போடறேன்றாங்க. அதே சமயம் வாடி, போடின்னு அலட்டலா பேசறாங்க. பிரியமா பேசறதுக்கே எந்த ஆம்பிளைக்கும் தெரியலை. அவங்களோட பார்டிக்கு போகணும். அவங்க அறிமுகப்படுத்தறவங்களை கும்பிட்டுட்டு வரணும். அவர் யார் அவர் பேர் என்னன்னு கேட்டாக்க ஏன் அவன்கூட படுத்துக்கப் போறியான்னு கேட்கிறாங்க.''

''மனோகரி இது நிஜமா நடந்ததா, நீயா பேசறியா.''

''என்னோட ஒன்னுவிட்ட அக்கால்லாம் பேசறதைக் கேட்டுருக்கேன். அவங்க குழந்தைய கொஞ்சுற மாதிரி உட்கார்ந்து அவங்க அழுவுறத எல்லாம் ஒன்னும் தெரியாத மாதிரி பார்ப்பேன்.''



''பணக்காரங்க அப்படித்தான். நான் அப்படியில்லை. நீ எப்படி மனோகரி.''

''என் புருஷன் ஒரு ஹோட்டல் வைச்சா நான் அதுல ஜெனரல் மேனேஜரா இருப்பேன். என் புருஷன் ஒரு சின்ன கடை வைச்சா நான் அதுல சேல்ஸ் கேர்ள்ளா இருப்பேன். என் புருஷன் டாக்டராயிருந்தா நான் வாசல்ல டோக்கன் கொடுப்பேன். எனக்கு எதாவது செய்யணும். எப்பவும் புருஷன் கூட இருக்கணும்.''

''உன் புருஷன் ஒரு பிலிம் டைரக்டராயிருந்தா.''

''நான் அசிஸ்டெண்ட் டைரக்டராயிருப்பேன். புரொடக்ஷன் பார்த்துக்குவேன்.''

''இது பேசவா என்கிட்ட வந்தே.''

''இந்த மாதிரி நிறைய பேசணும். அப்பா காகல ஆடு மாடு மாதிரி வளராது கொஞ்சம் கொஞ்சமா முன்னேறணும். எங்க வீட்டில என்னை அப்படி முன்னேற எல்லாம் அனுப்ப மாட்டாங்க. டாக்டருக்கு சீட் கிடைச்சா கூட அனுப்பமாட்டாங்க. என்ஜினியரிங் படிக்கிறதுக்கு தானா இடம் கொடுத்தாக் கூட வேணாம்னுதான் சொல்லுவாங்க. பொம்பளை நல்லா சாப்பிடணும். பெருசா வளரணும். கல்யாணம் கட்டி புருஷனோட இருக்கணும். கல்யாணம் கட்டின அடுத்த வருஷமே புள்ளை பெத்துட்டாக் கெட்டிக்காரத்தனம்.'' அவள் பேச்சு நிறுத்தி மூச்சு வாங்கினாள்.

ஜெகநாதன் அவளை விழி விரிய பார்த்தான்.

''எங்க ஒன்னுவிட்ட அக்கா ஒன்னு அவங்க கார் டிரைவரை லவ் பண்ணுச்சு. அக்கா டிரைவருக்கு எழுதின லவ் லெட்டர் வேலைக்காரி கைக்கு கிடைச்சு, வேலைக்காரி பெரியவங்ககிட்ட கொடுத்துட்டா. எங்கக்காவ நாய் அடிக்கிற மாதிரி செருப்பாலயும், தொடப்பத்தாலயும் அடிச்சாங்க. டிரைவர் மன்னிப்பு கேட்டதால அவனுக்கு ஐயாயிரம் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிச்சிட்டாங்க. அடுத்த மாசமே அக்காவுக்கு கல்யாணம் பண்ணி வைச்சுட்டாங்க. மாப்பிள்ளை கிட்ட மறைக்கலை. நடந்ததை சொல்லி அம்பது பவுன் அபராதம்னு கட்டினாங்க. அந்த மாப்பிள்ளை பன்னி அம்பது சவரன் நகையும் வாங்கிக்கினு, அந்த டிரைவர் என்ன பண்ணான் சொல்லு, அந்த டிரைவர் என்ன பண்ணான் சொல்லுனு கேக்கிறானாம். அவனுக்கு ஏகப்பட்ட பொம்பளை பிரண்ட்சாம். அவனுக்கு அபராதம் போடறா

தாயிருந்தா ஆயிரம் சவரனுக்கு மேல போடணும். ஆனா அபராதம் பொம்பளைக்குதான். ஆம்பிளைக்கில்லையே.''

ஜெகநாதன் மனோகரியை பிரமிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இந்த மாதிரி என்னை சுத்தி நிறைய கதை இருக்கு. இதனாலயே கல்யாணம்னா பயமா இருக்கு. நான் நகை போட்டுனு வர பொம்பளை மட்டும் இல்ல. எங்கியோ கிளார்க்கா இருக்கிற வேலையில்லை. புருஷன் செய்யுற வேலையில் நானும் இருக்கணும். என் கெட்டிக்காரத் தனத்தை என் புருஷன் நம்பணும். என் ஜெகன் நீங்க ரெண்டு வருஷத்துல டைரக்டரா ஆயிட மாட்டீங்க.''

''நான் ஆகிறதுக்கும், உனக்கும் என்ன சம்பந்தம்.''

''சம்பந்தம் இருந்தா என்ன. முதல் படம் சூப்பர் ஹிட் டாகி ரெண்டாவது படம் நிறைய அட்வான்ஸ் வாங்கி, அதுவும் ஹிட்டான பிறகு நீங்க வந்து கேட்டீங்கன்னா, எங்கப்பா மாட்டேன்னு சொல்ல மாட்டார். நான் உங்களை தான் கட்டிக்குவேன்னு சொன்னா கூடாதுன்னு சொல்ல மாட்டாங்க.''

''என்னை லவ் பண்றியா.''

''இல்லை நல்ல புருஷனா தேடறேன். நாம எப்பவாது பாத்துகிட்டா போதும். அரை மணி நேரம் பேசிகிட்டா போதும். என்ன ஷுட் பண்றீங்கன்னு சாதாரணமா லெட் டர் எழுதினா போதும் எனக்கு அது சந்தோஷமாயிருக்கும். நீங்க, ஜெயிக்கணும், நீங்க ஜெயிக்கணும்னு தினம் ஆயிரம் தடவை சொல்லத் தோணும்.''

''இப்போதைக்கு நான் ஏழை.''

''அதான் நல்லது. சண்டை போட்டு என் பங்கு இருபத் தஞ்சு லட்ச ரூபாய் வாங்கினு வந்துடுவேன். எப்ப தெரியுமா, நாம கல்யாணம் கட்டின பிறகு. நீங்க சம்பாதிச்ச பிறகு என்கூட நிறைய காசு வரும். உங்களை இன்னும் பெரிய ஆளாக்கும்.

''நான் தட்டு தூக்கனது அப்ப இளக்காரமாயிடும் மனோகரி.''

''கண்டக்டராயிருந்தது இளக்காரமாயிடுச்சா. பெட் ரோல் பங்க்ல வேலை செய்தது இளக்காரமாயிடுச்சா. நீங்க ஹோட்டல்ல வேலை செய்தது ஆச்சரியமாதான் இருக்கு.''



''நான் ஒன்னும் அழகு இல்லை மனோகரி.''

''கடவுளே, பொம்பளைய காட்டி கொடுக்காத ஆம்ப ளைதான் அழகு. அவளை மிரட்டாத ஆம்ப ரம். உங்களை எனக்கு புடிச்சிருக்காத ஆம்பளைதான் நம்பி லாத உற்சாகப்படுத்திக்கவோம். நாம யாருக்கும் சொல் நான் வேண்டிக்கிறேன்.'' நீங்க ஜெயிச்சு வரணும்னு என்னை கல்யாணம் பண்ணிக்க ணும்னு நீங்க கஷ்டப்பட்டு டைரக்டராயிடுங்க.''

''ஒரு வேளை நடுவுல உனக்கு கல்யாணம் ஆயிடுச் சினா.''

''ஆகாது.''

''ஆயிடுச்சின்னா.''

''நீங்க மனோகரின்னு ஒரு பொண்ணுக்கு பேர் வைச்சு அவ வல்வுல ஜெயிக்கிறதா ஒரு சினிமா எடுங்க அவ்வளவு தான், வேற என்ன பண்றது.''

''எல்லாம் கிடக்க திமிரு என்மேல எப்படி நம்பிக் கை.''

''பெரியவங்க காசுல சுகமா உட்கார்ந்து சாப்பிடறவங் களை விட சொத்து சுகத்தை விட்டுட்டு முன்னேற கஷ்டப்ப டறவங்களை எனக்கு புடிக்கும். அதுவும் தவிர லவ்வு, லவ்வுன்னு யாருக்கும் தெரியாம முத்தம் கொடுக்கறதை விட மனசுக்குள்ள மரியாதையா நட்பு வைக்கிறது நல்லதில் லையா.''

''அடேங்கப்பா, பிரமாதமா பேசறியே?

''முதல் வாரம் பெண் பார்த்து, ரெண்டாவது வாரம் கல்யாணம் கட்டி மூணாவது வாரம் ஏண்டா பொறந்தோ மோன்னு வருத்தப்படறத விட ஒரு நல்ல மனுஷனுக்கு மூணு வருஷம் காத்திருக்கிறது நல்லது இல்லையா.''

''நான் நல்லவன்னு உனக்கு எப்படி தெரியும் மனோ கரி.''

''இந்த மூணு வருஷத்துல தெரிஞ்சுடாது.''

''நீ என்ன லவ் பண்ணலை. ஆனா கல்யாணம் கட் டிக்க விரும்பறே அப்படியா''

''ஆமாம். காத்துகிட்டு இருப்பேன். நீங்க ஜெயிக்க ணும்னு காத்துகிட்டு இருப்பேன்.''

''நான் ஜெயிச்ச பிறகும் உங்க வீட்ல ஒத்துக்க

வைன்னா.''

''ஓடியாத்துடுவேன்.''

''காத்துகிட்டு இருக்கிறது மட்டும் லவ்வுன்னு நினைக்கிறியா.''

''ஆமாம். பனிக்காலத்துல மலை முழுக்க புல்லெல்லாம் கருகிப்போய் வெயிலுக்காக காத்துகிட்டிருக்கும். சுரம் உதிர்ந்த, உதிர்ந்த எப்படா சூரியன் உதிக்கும்னு காத்துக்கிட்டிருக்கும். மார்ச், ஏப்ரல்ல மெள்ள வெளிய வர ஆரம்பிக்கும். மே மாதம் பசேல்னு இருக்கும். பனி அமைதியான விஷயம். வெய்யில் சுறுசுறுப்பு, ஓட்டம். எனக்கு அடுத்த நூறு வருஷமும் பனிக்காலம்.''

''எனக்கு என்ன ஆச்சரியம்னா நான் என்ன சொல்ல நினைச்சேனோ அதை நீ சொல்ற. நான் எது தேடினேனோ, அதை நீ தேடுற. நாம லவ் பண்றதை விட இது நல்லது. இதுக்கு என்ன பேர் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை. ஆனா இது பேசினது சந்தோஷமாயிருக்கு. நாளைக் காலையில நான் ஹோட்டலுக்கு வரலை. என் ரூமுக்கு போறேன். வேலையை ரிசைன் பண்ணிட்டு சினிமாவுக்குப் போறேன். ஹோட்டலுக்கு ஒவ்வொரு மாசமும் செகண்ட் சண்டே வரேன். நீ கொண்டு வரப்போற இருபத்தஞ்சு லட்சத்தை விட இந்தப் பேச்சு பெரிசு. டென்த் படிக்கும்போது இப்படி பேசினா இருபது, இருபத்தஞ்சு வயசுக்கு நீ இன்னும் எவ்வளவு தெளிவா பேசுவ... யோசிக்கிற பொண்டாட்டி சந்தோஷம். பலம். திருட்டுத்தனம் பண்றவங்களுக்குத்தான் யோசிக்கிற பொண்டாட்டி பத்தி கவலையும் கோபமும் வரும். நல்லவராணும்னு நினைக்கிறவங்களுக்கு இந்த மாதிரி வேகம் ரொம்ப உதவி. நான் நிச்சயம் ஜெயிப்பேன் மனோகரி. நிச்சயமா டைரக்டரா வருவேன். வெறி புடிச்ச மாதிரி உழைப்பேன். இந்த பேச்சு போதும் எனக்கு. இன்னும் இருட்டறதுக்கு முன்னாடி வீட்டுக்கு போ. நான் யாரிடமாவது சேர்ந்துட்ட பிறகு உனக்கு போன் பண்றேன். எனக்கு ஆச்சரியமான விஷயம்... இது காதலா... இல்லையா... இது ரொம்ப வினோதமா இருக்கு எனக்கு. உனக்கு வினோதமா இல்லை.''

''ஆமாம். ஆனா இதான் சரின்னு தோணுது. ஆள் தெரியாம கல்யாணம் கட்டறதைவிட, லவ் பண்ணி உதை படறதை விட சைலண்டா இருக்கிறது நல்லது. இப்படி தெளிவா பேசறது உத்தமம். உன்னை வாசல்ல கொண்டு



விடறேன் மனோகரி. இருட்டாயிடுத்து கிளம்பு, ஏதுல வந்திருக்க.''

''ஆட்டோவுல.''

''வா. ஒரு ஆட்டோவுல உன்னை வீட்டுல கொண்டு போய் விட்டுட்டு நான் மறுபடியும் ஆஸ்டெல் வந்துக்கிறேன்.''

''ஏன் நான் போய்க்கிறேன். வேணாம்.''

''நான் லவ் பண்ற பொண்ணை தனியா எப்படி ஆட்டோவுல அனுப்புவேன்.''

''இது லவ்வா! அவள் அவனைப் பார்த்து சிரித்தாள்.

''வேணாம் எதுனா பேர் சொல்லி கெடுத்துட வேணாம். ரொம்ப அவசியம்னா இதுக்கு பேர் அக்கறைன்னு வைச்சுக்குவோம்.''

''என் மேல நீ அக்கறை காட்டினதுனால, எம்மேலேயே எனக்கு அக்கறை வந்திடுச்சு. இறங்கணும் முழு மூச்சா இறங்கணும், ஜெயிக்கணும். நீ சொன்ன உதாரணம் கரெக்ட். காதலிக்கிற காலம் பனிக்காலம். முன்பனிக்காலம். அப்ப அமைதியா இருந்தாதான் பின்னாடி அட்டகாசமா இருக்கலாம். காதலை ஆரவாரமா பண்ணிட்டு வாழ்க்கையை கஷ்டப்படுத்திகிறாங்க. நாம ஜெயிச்சிட்டு ஆரவாரமா இருப்போம். ஆட்டோ'' ஜெகன் கத்தினான்.

அவர்கள் ஆட்டோவில் ஏறினார்கள். அவள் தெருமுனையில் இறங்கும் வரை அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. இறங்கிய பிறகு ஒருவரை ஒருவர் கூர்ந்து பார்த்தார்கள். கை அசைத்தார்கள். பிரிந்தார்கள்

ஆட்டோவில் திரும்பிய ஜெகநாதனுக்கு லேசாய் குளிர்ந்தது. ஆனாலும் ஆர்வமாய் தெருவைப் பார்த்தபடியே வந்தான். மனசுக்குள்ளே பனி பெய்தது போல ஒரு சந்தோஷமான அமைதி இருந்தது. உள்ளே ஒரு அமைதியோடு தான் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தான். அப்படி யோசிப்பது அவனுக்கு புதிதாக இருந்தது.

• (முற்றும்) •